எரிமலையாய்ச் சுடுதழலாய்

கலைஞர் மு. கருணாநிதி



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களது 65வது பிறந்தநாளை யொட்டி, அவர் விடுத்த வேண்டுகோளை ஏற்று, அவருக்கு அளித்து வரும் புத்தகங்களில் சில புத்தகங்கள் தங்கள் நூலகத்திற்கு வழங்கப்படுகிறது.

தி.மு.க. தலைமைக் கழகம்,

அண்ணா அறிவாலயம்,

சென்னை–18.

எரிமலையாய்...
சுடுதழலாய்...

திருத்தணி அரக்கட்டளை
பொறியியல் கல்லூரி
நூலக நூல்
இலக்கண எண்-18
அண்ணா நூற்றாண்டு

கலைஞர்.மு.கருணாநிதி

பானு பதிப்பகம்

ஏ3/96, கைலாசபுரம்,
திருச்சிராப்பள்ளி - 620 014.
தொலைபேசி : 98422 36935

எரிமலையாய்...
சுடுதழலாய்...

கலைஞர்.மு.கருணாநிதி

வெளியீடு:

பானு பதிப்பகம்

ஏ3/96, கைலாசபுரம்,
திருச்சிராப்பள்ளி - 620 014.
தொலைபேசி : 98422 36935

A1659

தி 894.8115
கரு/ர

ERIMALAIYAAI...
SUDUTHAZALAAI...

Dr. Kalaingar. M. Karunanithi

First Edition : 2008

No. of Pages : 80

Size of Book : 1/8 Demy

Paper used for text : 18.6 Maplitho

Printing Type : 12 Points

Published by : **Banu Pathippakam**
No. A3/96, Kailasa Puram,
Trichirappalli - 620 014.
Phone: 98422 36935

Typeset at : Amaravathi Graphics, Chennai - 33.

Printed at : Udhayam Offset, Chennai - 600 002.

Price : **Rs. 50/-**

திருக்குவளை அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சேகரிப்பில்
அண்ணா நூற்றாண்டு நூலகம்

எரிமலையாய்....
சுடுதழலாய்.....

(சென்னை பெரியார் திடலில் 13.7.1985 அன்று நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாட்டில் தலைவர் கலைஞர் ஆற்றிய பேருரை.)

என் கண்களைத் திறந்த தந்தை பெரியார் அவர்களுடைய படத்தைத் திறக்கின்ற இந்த நிகழ்ச்சியில் வெள்ளம் போல் குழுமி இருக்கின்ற தமிழின மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்காக, இந்த வாய்ப்பினை வழங்கிய திராவிடர் கழகத்தினுடைய மாநாட்டு நிர்வாகக் குழுவினருக்கும், குறிப்பாகத் தளபதி வீரமணி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலையிலே இருந்து இதுவரையில் பல்வேறு படத் திறப்பு விழாக்கள் நடைபெற்று, இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் நிகழ்ச்சிகளிலே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துகளுக்கெல்லாம் அந்தக் கருத்துகளால் உருவாக்கப்பட்ட எழுச்சிகளுக்கெல்லம் யார் வித்திட்டாரோ, அந்த மேதையின் படத்தைத் திராவிடத் தந்தையின் படத்தை இனமான வீரருடைய படத்தைத் திறந்து வைக்கின்ற பணி எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் தனித் தமிழ்ஈழ நாடு வரையப்பட்ட படத்தினை இங்கே திறந்து வைத்து உரையாற்றிய

போது ஒன்றைச் சொன்னார். தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் கருணாநிதியை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு பத்திரிகையிலே எழுதப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு அதைக் கண்டித்தார். நான் சொல்கிறேன், ஆமாம், தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் என்னை விட்டு விலகிக் கொண்டிருக் கிறார்கள் என்றால் அதை நான் நிச்சயமாக வரவேற்பேன். என்னை விட்டு விலகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு நான் கொள்கின்ற பொருள், அவர்கள் தமிழ்நாட்டை விட்டு விலகிக் கொண்டிருக்கிறார்கள் என்று பொருள்.

தமிழ் நாட்டை விட்டு அவர்கள் விலகிச் செல்கின்ற காலம் தமிழ் ஈழம் அமைகின்ற காலமாக இருக்கும் என்ற காரணத்தால் எவ்வளவு நாள்தான் அவர்கள் என்னோடு இருப்பது அவர்களுக்கு என்று ஒரு நாடு கிடைத்து, என்னைவிட்டு அவர்கள் விலகிச் செல்லக் கூடிய காலம் வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற நாங்கள் அந்தப் பத்திரிகையின் பதிலைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றாலும்கூட, அது விஷமத்தனமாக அல்லது காழ்ப்புணர்ச்சியோடு அல்லது தமிழ் இன உணர்வு கிஞ்சிற்றும் இல்லாமல் எழுதப்பட்டிருக் கின்ற ஒரு வாசகம் என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை.

எனவேதான் தமிழனுடைய இனமான உணர்வு தமிழகத்தில் மாத்திரமில்லை, உலகம் முழுவதும் உயிர்ப்பிக்கப்பட வேண்டும். காப்பாற்றப்பட வேண்டும் என்ற இலட்சியத்தோடு கடைசி மூச்சு வரையில் போராடிய தந்தை பெரியார் அவர்களை நாம் நினைவு கொள்கிறோம். மன்னிக்க வேண்டுகிறேன் நினைவு கொள்கி றோம் என்று கூறுவது கூட தவறு. மறந்தால் அல்லவா நினைப்பதற்கு எப்போதும் நம்முடைய நெஞ்சத்தில் நம்முடைய ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்திருப்பவர் தந்தை பெரியார்.

பெரியார் என்றால் இங்கே எழுதி வைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட படத்தை மாத்திரம் நான் சொல்லவில்லை. இந்தப்

பெருவெளியில் ராதா மன்றத்திற்கு அருகாமையில் நீடுதுயில் கொண்டிருக்கிறாரே, அந்தப் பெரியார் அவர்கள், எந்தக் கொள்கைகள் இந்த இனத்திற்குத் தேவை என்று காலமெல்லாம் பாடுபட்டாரோ, எந்த இலட்சியங்களை இதயத்திலே ஏற்று நாம் பணியாற்ற வேண்டுமென்று கடைசி மூச்சுள்ள வரையிலே முழங்கிக் கொண்டிருந்தாரோ அந்தக் கொள்கைகள், இலட்சியங்கள் வெற்றி பெற வேண்டும். அதற்குச் சிறிதளவு ஊனம் ஏற்பட்டாலும், இழுக்கு யாரிடமிருந்தாவது வந்துற்றாலும், அந்தக் கொள்கைகளைச் சிதைப்பதற்கான முயற்சிகள் அதிகாரம் படைத்தவர்களால் நடத்தப்பட்டாலும், நாம் துடித்துப்போகிறோம் நம்முடைய ரத்தம் கொதிக்கிறது. நரம்புகள் புடைக்கின்றன. ஏனென்றால் எத்தனையோ ஆண்டுக் காலம் இளமைப்பருவம் முதல் பெரியார் அவர்களை நம்முடைய நெஞ்சத்தில் நிறுத்தி, அவர் யாத்துத் தந்த கொள்கைகளை இந்தத் தமிழகத்தின் வீதிதோறும் ஒலித்தவர்கள் நாம். இன்றைக்கும் அந்தக் கொள்கையால் தான் அவர் தந்த இலட்சியத்தால்தான் இந்த இனமே வாழ முடியும். இந்த நாடு வளர முடியும் இந்தச் சமுதாயம் எழுச்சி பெற முடியும் என்று நம்பிக் கொண்டிருப்பவர்கள் நாம்.

பெரியார் படத்தைத் திறந்து வைக்கும் நேரத்தில் அவருடைய எண்ணங்கள், ஐம்பது அறுபதாண்டு காலமாக சொல்லப்பட்ட கருத்துகள் இன்று வெற்றி பெற்றிருக்கின்றன என்பதை நான் இரண்டு நாள்களுக்கு முன்னால் அறிந்து பரவசமுற்றேன். 2,500 ஆண்டுகளுக்கு முன்னால் புத்தர் சில வாசகங்களை உலகத்திற்குச் சொன்னார். அந்த வாசகங்களையும், வேறு சில கட்டுரைகளையும் கொண்ட மத்திய அரசின் சார்பாக வெளியிடப்பட்ட திட்டம் என்ற ஏடு ஒன்று என்னுடைய பார்வைக்கு வந்தது. மத்திய அரசின் செய்தித் துறையில் ''யோஜனா'' என்ற பெயரில் ஆங்கிலத்திலும் இந்தியிலும் வெளியிடப்படும் இதழ், தமிழில் 'திட்டம்' என்ற பெயரில் வெளியிட்டிருக்கிறார்கள்.'

"Edited. Printed and Published by D. Janaki on behalf of the Director Publications Divisions. Ministry of Information and Broadcasting. Government of India. Pattiala House. New Delhi-110 001.

என்று அதிலேயே அச்சேற்றி வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழைப் பொறுத்தவரையில் இது தமிழ்நாடு அரசாங்கத்தின் அச்சகத்திலேயே மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டிருக் கிறது. இந்த இதழிலே பெரியாரின் பெயர் எந்த இடத்திலும் குறிப்பிடப்படாவிட்டாலும், ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு எழுத்திலும் பெரியார் சிரித்துக் கொண்டிருப்பதை, பெரியாரின் கொள்கைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை என்னால் காண முடிந்தது. அந்த இதழிலே பெரியாரின் பெயர் எந்த இடத்திலும் குறிப்பிடப்படாவிட்டாலும், ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு எழுத்திலும் பெரியார் சிரித்துக் கொண்டிருப்பதை, பெரியாரின் கொள்கைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை என்னால் காண முடிந்தது. அந்த இதழிலே ஒரு பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கும் ஒரு பொன்மொழி இதோ:

''யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காக ஒன்றை நம்பாதே - அது நமது மரபு என்பதற்காக நம்பாதே - அல்லது நீயே அப்படி நினைத்தாய் என்பதற்காக நம்பாதே.''

''ஆசிரியர்பால் கொண்டுள்ள மரியாதைக்காக ஆசிரியர் சொல்வதை நம்பிவிடாதே.''

''சுயமாக ஆராய்ந்து, துருவிப் பார்த்து அது எல்லா மக்களுக்கும் நன்மை பயக்க வல்லது, நல்லது என்று வழி தோன்றினால், அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்துக் காட்டி நெறியாக வைத்துக் கொள்.''

''2500 ஆண்டுகளுக்கு முன்பு புத்தர் பெருமான் கூறியது இது. இதுதான் உண்மையில் அறிவியல் உணர்வு.''

அது மாத்திரமல்ல; அந்த இதழின் முதல் பக்கத்திலே ''நன்றி, நேரு செண்டர்'' ''அறிவியல் உணர்வு பற்றிய அறிக்கை'' என்று

போட்டு, ''அறிவியல் உணர்வு - அது என்ன?'' என்ற தலைப்பின் கீழ் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றால்;

''வினாக்களை எழுப்பும் உரிமை, வினாக்களை வரவேற்கும் உரிமை, காரண காரியங்களை அறிய வேண்டும் என்ற வேட்கை ஆகியவை அறிவியல் உணர்வுக்கு அடிப்படையாகும். இது, ஏன், எப்படி, எதற்கு என்ற வினாக்களை எழுப்புபவன், அறிவியல் உணர்வு பெற்றவன். வழக்கத்தில் அனுசரிக்கப்பட்டு வரும் ஒரு கொள்கை, அல்லது அறிவுரை அல்லது ஒரு சமூக நிகழ்ச்சி ஆகியவற்றை வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் ஒப்புக் கொள்ளாது, அறிவியல் ரீதியில் விளக்கம் கோரி அவன் வினா எழுப்புவான். ஆகவே குருக்கள், மதத் தலைவர்கள் போன்ற பல பெரியோர்களின் கூற்றுக்களை அப்படியே ஏற்றுக்கொள்ளும் போக்குக்கு முரணானது அறிவியல் உணர்வு.

தெரிந்து கொள்ள வேண்டியவை பெருமளவு இருக்கிறது என்பதை உணர்ந்தபோதிலும், உலகச் சிருஷ்டியின் ரகசியத்தை, அற்புதங்களை மெல்ல மெல்ல அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல், மனிதனுக்கு உண்டு என்ற நம்பிக்கையைத் தன்னகத்தே கொண்டிருப்பது அறிவியல் உணர்வாகும்.

பழங்காலக் கருத்துக்கள், நம்பிக்கைகள், கொள்கைகள், விதிகளை ஒதுக்கித் தள்ளுவதின் மூலம்தான் அறிவு வளர்ச்சி ஏற்படும் என்பது அறிவியல் உணர்வின் முக்கிய அம்சமாகும். அறிவு என்பது வளர்ந்து கொண்டே வருவது. அதற்கு முடிவு இல்லை.''

இதைத்தான் பெரியார் சொன்னார். அதைத்தான் மத்திய சர்க்கார் அச்சடித்துத் 'திட்டம்' என்ற இதழில் வெளியிட்டிருக் கிறது. நான் இதைச் சொல்லாமல், அந்த இதழிலே வெளி வந்ததை மட்டும் படித்தால் தந்தை பெரியார் அவர்களுடைய கருத்துக்கள் தொகுக்கப்பட்ட ஒரு நூலிலேயிருந்து கருணாநிதி சிலவற்றைப் படித்துக் காட்டுகிறான் என்றுதான் கருதுவீர்கள்.

மேலும் அதே இதழில் -

"கடவுள் என்பது ஒரு எண்ணமே! கடவுளை உண்மைக்கு ஒப்பிடுவார்கள். அப்படியானால் அவர் இருக்க வேண்டிய இடம் கோவில் அல்ல; பரிசோதனைக்கூடம். அங்குதான் உண்மையைக் கண்டுபிடிக்கும் பணி நடக்கிறது."

இதுவும் மத்திய அரசு வெளியிட்டுள்ள அந்த 'திட்டம்' இதழில் காணப்படும் அரிய கருத்துதான்.

இன்னுமோர் இடத்தில் -

"இந்தியச் சமுதாயத்தில் பெரும் விஞ்ஞானிகள் கூட அடிக்கடி கோவிலையும் மதத் தலைவர்களையும் நாடுகிறார்கள். இது அறிவியல் உணர்வை வலுப்படுத்தாமல் மத சம்பந்தமான மூட நம்பிக்கைகளை வலுவாக்குகிறது. நம் நாட்டில் விஞ்ஞானிகளும் தலைவர்களும் சமூகச் சீர்திருத்தவாதிகளாக விளங்க வேண்டும்."

அதாவது விஞ்ஞானிகள் கூட கோவிலுக்குப் போகிறார்கள் என்று கேலி பேசுகின்ற இந்தத் 'திட்டம்' ஏடு, மூகாம்பிகை கோவிலுக்குப் போகின்றவர்களைப் பற்றி என்ன சொல்லும் என்பதை நீங்களே எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

மற்றுமோர் இடத்தில் -

"ஒழுக்க நெறிகளில் தெய்வீகம் எதுவும் இல்லை. இவை தனி மனிதனின் நடத்தையைப் பொறுத்தது. மனிதனின் ஒழுக்கம், அவனுடைய கல்வி, சமூகத் தொடர்பு, அவனுக்குள்ள அனுதாப உணர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததே ஒழிய, மத அடிப்படை இதற்குத் தேவை இல்லை என்று கூறுகிறார். மரணத்திற்குப்பின் நரகலோகத்தில் தண்டனை அல்லது சொர்க்கத்தில் மோட்சம் போன்ற நம்பிக்கைகளின் அடிப்படையில் மனிதனை வாழ வைப்பது சரியில்லை."

நீங்கள் நினைத்துக் கொள்ளலாம்; நான் படித்ததற்குக் கீழே "பெரியார் பொன்மொழி" என்று போட்டிருக்குமென்று; அப்படி ஒன்றும் இல்லை. திட்டம் பத்திரிகையினுடைய சிறப்பிதழில் வெளிவந்த கருத்துத்தான் இது.

பிறிதோர் இடத்தில் - அதே இடத்தில் -

''வீறுகொண்டு செயல்படாமல் விதியை நம்பிக் கொண்டேயுள்ள பழைய மனோபாவம் உள்ள இந்தியனுக்கு இனி இடமில்லை. கடந்த பல ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மனித சமுதாயத்தை உண்மையான முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதாக இல்லை.''

இதுவும் அந்த ஏட்டில் வெளி வந்திருப்பதுதான். இறுதியில் ஒரு பக்கத்தில் ''அறிவியல் உணர்வு - ஏன் அவசியம்'' என்ற தலைப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள்:-

''அறிவியில் உணர்வின் அத்தியாவசியமான அம்சங்களை விளக்கிய பிறகு நமது நாட்டு நிலவரத்தைச், சற்று ஆராய்வோம். காலம்சென்ற பண்டித ஜவகர்லால் நேரு, அறிவியல் உணர்வின் அவசியத்தை வற்புறுத்தி வந்த போதிலும், நாட்டில் மூட நம்பிக்கைகள், பழமை எண்ணங்கள், பழக்க வழக்கங்கள் வளர்ந்து கொண்டே வருவதைக் காண்கிறோம். தெய்வீக அருள் பெற்றவர்கள் அற்புதச் செயல்களைப் புரிவோர் என்று கூறிக்கொண்டு ஏராளமான பேர், மக்கள் மத்தியில் உலவி வருகின்றனர். பலவகைப்பட்ட இவர்களுடைய செல்வாக்கும் பெருகிக் கொண்டே வருகிறது. மக்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சனைகளை உடனடியாக மாய வித்தையினால் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதற்கு நவீன தகவல் தொடர்புச் சாதனங்களும் பிரச்சாரக் கருவிகளும் பயன்படுத்தப் படுகின்றன.

மனிதன் சந்திர மண்டலத்திற்குள் சென்று திரும்பி வரும் இந்தக் காலத்தில் கோள்களின் சஞ்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஜோதிடம், அல்லது கைரேகை சாஸ்திரம், அல்லது எண் ஜோதிடம் ஆகியவற்றில் மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. நமது பண்டைய வரலாற்றில் குறுகிய சாதிப் பற்று மேலோங்கி இருந்ததாகவும் இடைக்காலத்தில் வகுப்பு வெறி தலைவிரித் தாடியதாகவும் வரலாறு எழுதப்பட்டது.

அறிவியலுக்குப் புறம்பான இத்தகைய நம்பிக்கைகள் எவ்வாறு ஏற்பட்டன என்பதை அறிந்து கொள்ள வேண்டியது முக்கியம். எனினும் அவை இன்னும் நீடித்து அதனால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகளையும், பிரச்சினைகளையும் புரிந்து கொள்ள வேண்டியது அதைவிட முக்கியம். பெரும்பான்மையான மக்களின் சொந்த வாழ்க்கை நிலையுடன் பொருந்தி இருப்பதன் காரணமாகத் தான் இந்த நம்பிக்கைகள் நீடிக்கின்றன. சமூகக் கலாச்சார நெருக்கடியில் மனிதனிடம் தன்னம்பிக்கையையும், உற்சாகத்தையும் உண்டாக்க அறிவியல் உணர்வு பயன்பட வேண்டும். சமநீதி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்.''

இத்தனையும் மத்திய அரசினுடைய செய்தித்துறை அமைச்சகத்தின் சார்பில் ஆங்கிலத்திலும், இந்தியிலும், ''யோஜனா'' என்றும், தமிழில் ''திட்டம்'' என்றும் வெளியிடப் பட்ட இதழில் வந்துள்ள கருத்து.

அதில் ஒரு பிரதி என் கைக்குக் கிடைத்தது. அதனைப் படிக்கப் படிக்க ஒவ்வொரு பக்கத்திலும் அறிவியக்கக் கருத்துக்களின் முக்கியத்துவம் விளக்கப்படும் தொகுப்பாகத் தான் அந்த இதழ் வெளியிடப்பட்டிருக்கிறது. எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி எல்லாம் 2,500 ஆண்டுகளுக்கு முன்னால் புத்தர் எந்தக் கொள்கையைச் சொன்னாரோ - அப்படி அந்தக் கொள்கை களைச் சொன்ன புத்தரைத் தெய்வமாக ஆக்கி அவருடைய கொள்கைகளை அழித்து விட்டார்கள். ''கண்மூடிப் பழக்க மெல்லாம் மண்மூடிப் போக'' என்று சொன்ன வடலூர் வள்ளலாரைத் தெய்வமாக ஆக்கி அவருடைய கொள்கைகளை அழித்து விட்டார்கள். ''தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த நான் ஆலயத்திற்குள் போகக் கூடாதா'' என்று கேட்ட நந்தனைத் தெய்வமாக ஆக்கி அவனுடைய கொள்கைகளை அழித்து விட்டார்கள். நம் நாட்டிலே இருக்கின்ற மூட நம்பிக்கையாளர் களின் மிகப்பெரிய கெட்டிக்காரத் தனம், திறமை அவர்கள் பெற்றிருக்கின்ற ஆற்றல் - யார் முற்போக்கான சீர்த்திருத்தக் கருத்துக்களைச் சொல்லுகிறார்களோ, அவர்களையே

தெய்வங்களாக ஆக்கி அவர்களுடைய கொள்கைகளை அழித்துவிடுவதுதான்.

''நட்ட கல்லை தெய்வமென்று நாலுபுட்பம் சாற்றியே
சுற்றி வந்து மொணமொண வென்று சொல்லும் மந்திரம்
ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ, நா தன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?''

என்று கேட்டார் சிவவாக்கியர். அவரே அப்படிக் கேட்டிருக்கிறாரா என்று நாம் சொன்னால் அவர்கள் எல்லாம் தெய்வங்கள் என்று அவர்களைத் தெய்வங்களாக ஆக்கி அவர்கள் சொன்ன கருத்துக்களை அழித்து விட்டார்கள்.

ஆனால் அந்த ஆபத்தில் சிக்காமல் தப்பித்துக் கொண்டு ஒரு பேரியக்கத்தை இன்று உயிரோடு நடமாட விட்டிருப்பவர்தான் தந்தை பெரியார். காரணம் யாரும் அவரைத் தெய்வமாக ஆக்கவில்லை. ஆக்கினாலும் அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார். அதனால்தான் அவருடைய உடலைக் கூட நாம் இங்கே பத்திரமாக வைத்து விட்டோம். இல்லாவிட்டால் அவரையே கூட தெய்வமாக ஆக்கிவிட்டு அவருடைய கொள்கைகளை அழித்துவிடக் கூடும் என்கின்ற அச்சம். அதன் காரணமாகத்தான் ஆரம்ப காலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து இத்தகைய கருத்துக்களை சொன்னவர்களையெல்லாம் தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்று சொல்லிச் சொல்லி, அவர்களுடைய கொள்கைகளையெல்லாம் அழித்து விட்டார்களோ; அப்டி ஒரு ஏழெட்டு ஆண்டுகாலமாக அல்லது பத்தாண்டு காலமாக தமிழகத்தில் தந்தை பெரியாருடைய கொள்கைகளை, அறிஞர் அண்ணா அவர்களுடைய இலட்சியங்களைக் கொள்கைக் கோட்பாடுகளை அவர்களை உயர்த்திக் கொண்டே அழித்துக் கொண்டு வருகின்ற செயல் தமிழகத்தில் நடைபெற்றக் கொண்டிருக்கிறது.

எங்கே? யாரால்? என்று நீங்கள் என்னைக் கேட்க மாட்டீர்கள். நானும் சொல்லத்தேவையில்லை.

ஆனால் அந்த விபத்திலே இருந்து பெரியாரையும், அண்ணாவையும் காப்பாற்றுகின்ற பணியைத்தான், நானும் வீரமணி போன்றவர்களும் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் உறுதியோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார் அவர்களுடைய பெயரைச் சொல்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சொல்கிறார்கள். இருக்கிற ஆபத்தே, என்னுடைய இளவல் தளபதி வீரமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ''நாங்கள் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் விரோதிகள் என்று அறிவித்துவிட்டு வாருங்கள். பெரியாருடைய கொள்கைகளை, அறிஞர் அண்ணாவினுடைய கொள்கைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்; பெரியாரிடமிருந்தும், அண்ணாவிடமிருந்தும் நாங்கள் மாறுபடுகிறோம்'' என்று சொல்லிவிட்டு வாருங்கள். நேருக்கு நேர் நிற்போம். ஆனால் நீங்கள் பெரியாருடைய பெயரையும், அண்ணாவினுடைய பெயரையும் சொல்லிக் கொண்டு இதுதான் பெரியாருடையக் கொள்கை; இது தான் அண்ணாவினுடைய கொள்கை என்று சொல்லி மக்களை ஏமாற்றுகின்றீர்கள். எனவேதான் உங்களுடைய மாயையிலிருந்து மக்களை விடுவிப்பது எங்களுக்குச் சிரமமாக இருக்கிறது. நீங்கள் தீரர்களானால், நாங்கள் பெரியாருக்கு மாறுபட்டவர்கள்; நாங்கள் அண்ணாவுக்கு மாறுபட்டவர்கள்; அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று கூறிவிட்டு வாருங்கள். உங்களைச் சந்திக்க நாங்கள் தயராக இருக்கிறோம் என்று வீரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைத்தான் மீண்டும் வலியுறுத்திச் சொல்கின்றேன்.

நான் அடிக்கடி சொல்லுவதுண்டு. பச்சைப் பாம்பும் பச்சைக் கொடியும் பின்னிக் கொண்டிருக்கும் பொழுது எது பாம்பு, எது கொடி என்று தெரியாமல் தவிக்கிற நிலை ஏற்படுவதைப் போல இன்றைக்குத் தமிழகத்திலே நாமும் திராவிடர் இயக்கம்; அதைப் போலவே ஆளுகின்ற தரப்பாரும் திராவிடர் இயக்கம். எனவே,

இதில் பச்சைக்கொடி எது? பச்சைப் பாம்பு எது? என்று தெரியாமல் பச்சைக்கொடியாக உண்மையான திராவிடர் இயக்கமாக நாம் இருக்கிற நேரத்தில் பச்சைப்பாம்பு பச்சையாகத் தான் இருக்கிறது என்று கருதி ஏமாறுகிற பாமர மக்கள் தொடர்ந்து ஏமாந்து கொண்டே வருகின்ற பரிதாபகரமான காட்சியைத் தமிழகத்தில் இன்றைக்கு நாம் பார்த்து வருகின்றோம்.

வீரமணி அவர்கள் உரையாற்றும்போது ஒன்றைச் சொன் னார்கள். நாளைய தினம் இதே இடத்தில் இட ஒதுக்கீட்டிற்கான மாநாடு. அது குறித்த கருத்துக்களை வெளியிடுகின்ற மாநாடு, முடிவுகளை மேற்கொள்கின்ற மாநாடு நடைபெற இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதற்கு முன்பே இப்போதே ஒன்றைச் சொன்னார்கள். நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் நேற்று சட்டமன்றத்திலே விடுத்துள்ள அறிவிப்பு இந்த மாநாட்டிற்கு ஒரு வெற்றி முகப்பாகவே அமைந்திருக்கிறது என்று வீரமணி அவர்கள் சொன்னார்கள்.

எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம், கடந்தகால அனுபவத்தையொட்டி எனக்கு ஏற்படுகிற அச்சமெல்லாம், நாவலர் சொல்லி விட்டாலே அது அரசாங்கத்தினுடைய முடிவாக ஆகிவிடுமா என்பதுதான்.

ஏனென்றால் சட்டமன்றத்திலே பலமுறை பல்வேறு பிரச்சனைகளில் நாவலர் அவர்கள் இதுபோன்ற உறுதி மொழிகளை தந்தார்.

ஆனால் அடுத்த நாள் - அல்லது அதற்கு அடுத்த நாள் - சட்டமன்றத்திற்கு வந்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், நாவலர் சொன்னாலும் சரி, பண்ருட்டி சொன்னாலும் சரி, நான் அவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அமைச்சரவை என்பது ஒரு கூட்டுப் பொறுப்பு. ஆனாலும்கூட இந்த அறிக்கையைக் குறித்துச் சட்டமன்றத்திலேயே

விவாதிக்கலாம் என்று நாவலர், பண்ருட்டி ராமச்சந்திரன் இவர்களெல்லாம் தந்த வாக்குறுதிகள் மறுநாள் முதலமைச்சர் வந்த பிறகு மாற்றப்பட்டு, அவர்கள் அப்படிச் சொல்லி இருந்தாலும் நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று முதலமைச்சரே சட்டமன்றத்தில் அறிவித்த நிகழ்ச்சிகள் பல உண்டு.

அது வீரமணி அவர்களுக்கும் தெரியும். தெரிந்தாலும் கூட அவர் இன்றைக்கு முன்கூட்டி நன்றி கூறியிருப்பதற்குக் காரணம், 'கமிட்' பண்ண வைப்பது என்பார்களே, அதைப்போல சர்க்காரை 'கமிட்' பண்ண வைக்கிறார் என்றுதான் நான் எண்ணுகிறேனே அல்லாமல், நம்புகிறார் என்று நான் எண்ணிக் கொள்ளவில்லை.

50 சதவிகித இட ஒதுக்கீட்டிற்காக நாங்கள் நிச்சயமாக வாதாடுவோம், போராடுவோம், அதிலே நாங்கள் அழுத்தம் திருத்தமாக நிற்போம் என்று நாவலர் கூறியிருப்பதாக ஏடுகளிலே வெளிவந்திருக்கிறது.

ஆனால் கடந்த கால வரலாற்று நிகழ்ச்சிகளைப் பார்த்தால் இந்த இடஒதுக்கீட்டிற்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையிலே எப்பொழுது ஆபத்து வந்தது?

வீரமணி அவர்கள் அழகாக அருமையான ஆதாரங்களை அள்ளிக்கொட்டி, புள்ளி விவரங்களைக் குறித்து இங்கே ஒரு நூலை என்னைக் கொண்டு வெளியிடச் சொல்லி, மதுரை ஆதீனகர்த்தர் அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டிருக் கிறார்கள். வகுப்புவாரி உரிமையினுடைய வரலாறு குறித்த - கம்யூனல் ஜி.ஓ.வினுடைய வரலாறு குறித்தது அந்த நூல்.

அதிலே 1926-27ஆம் ஆண்டில் மூதறிஞர் முத்தையா அவர்களுடைய காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த இட ஒதுக்கீடு, இடையிடையே பல்வேறு விதமான பேராபத்துகளுக்கு ஆளாகி, அந்தக் கண்டகளிலெல்லாம் தப்பித் தப்பி, 1950ஆம் ஆண்டில் இடஒதுக்கீடு அரசியல் சட்டத்தின் அடிப்படையில் செல்லாது என்று அல்லாடிகளெல்லாம் அன்றைக்கு வாதம் செய்து,

உயர்நீதிமன்றத்திலும் நம்முடைய பிற்படுத்தப்பட்டச் சமுதாயத்தை தாழ்த்தப்பட்டச் சமுதாயத்தைக் காப்பாற்றக் கூடிய இட ஒதுக்கீடு முறைக்குத் தீர்ப்பளிக்கப்படுகிற நேரத்திலே ஆபத்து ஏற்பட்டு, அதற்குப் பிறகு உச்சநீதிமன்றத்திலும் அதே ஆபத்து நிலைநிறுத்தப்பட்டு, அதற்குப் பிறகு தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் அன்றைக்குத் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் என்ற பெயரில் இரு இயக்கங்களாக இருந்தாலும் கூட, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலத்திலே அண்ணா அறிவித்ததைப் போல் அந்தப் பிரச்சனையிலும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருந்து பாடுபட்டுப் பணியாற்றிப் போராடி வதாடி நாம் தமிழகத்திலே எழுப்பிய புயலின் காரணமாக, பண்டித ஜவகர்லால்நேரு அவர்கள் அரசியல் சட்டத்திலே முதல் திருத்தத்தைக் கொண்டு வந்தார். இந்தியாவினுடைய அரசியல் சட்டத்தில் இதுவரையிலே ஐம்பதுக்கு மேற்பட்ட திருத்தங்கள் வந்திருக்கின்றன என்றாலும், முதல் திருத்தம் தந்தை பெரியார் அவர்களால், அண்ணா அவர்களால் நாம் நடத்திய போராட்டத்தால்தான் உருவாக்கப் பட்டது என்கின்ற வரலாற்றை நீங்கள் யாரும் மறந்துவிடக் கூடாது.

அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் சமுதாயத்திலே இடஒதுக்கீடு தேவை என்பதை வலியுறுத்துவதாகும். அது எந்த அடிப்படையிலே என்றால் பொருளாதார அடிப்படையிலே அல்ல. சமூக அடிப்படையில், கல்வி அடிப்படையில் - Socially and Educationally என்ற சொற்றொடரோடு அந்த அரசியல் சட்டத்திருத்தம் இந்திய அரசியல் சட்டத்திலே முதன் முதலாக ஏறியதை யாரும் மறந்துவிடக் கூடாது.

அதற்குப் பிறகுமெல்ல மெல்ல அந்த உரிமைகள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தாழ்த்தக்கப்பட்டச் சமுதாய மக்களுக்குக் கிடைத்தது - ஆனாலும் போதுமான அளவுக்கு கிடைக்கவில்லை என்கின்ற உணர்வு கொந்தளித்துக் கொண்டிருந்தபோது, அண்ணா அவர்களுடைய மறைவுக்குப்

பின்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொடர்ந்த அந்தக் காலத்தில், அண்ணாவின் அடியொற்றிப் பொறுப்பேற்றுக் கொண்ட நான், தந்தை பெரியார் அவர்களுடைய ஆலோசனை அடிக்கடி கேட்டுச் செயல்படுகிறவனாகவும் இருந்த காரணத் தால், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நல மேம்பாடுகளைக் கவனித்து அரசின் சார்பில் ஆவன செய்ய ஒரு குழுவை, திருவாளர் சட்டநாதன் அவர்களது தலைமையில் அமைக்கப் பட்டு, அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளையெல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பிற்படுத்தப்பட்டோருக்கு இருபத்தைந்து சதவிகிதம் என்றிருந்தை 31 என்றும், தாழ்த்தப்பட்டவருக்கு 16 சதவிகிதம் என்றிருந்தை 18 என்றும் உயர்த்தி ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

பிறகு, கழக ஆட்சி நெருக்கடிக் காலச் சட்டத்தை எதிர்த்ததின் காரணமாகச் சோதனைக்கும், வேதனைக்கும் ஆளாக்கிக் கவிழ்க்கப்பட்டதற்குப் பிறகு, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே அ.தி.மு.க. ஆட்சி உருவான பிறகு 79ஆம் ஆண்டில், 9000 ரூபாய் உச்ச வரம்பு. 9000 ரூபாய் வரையிலும் வருமானம் உள்ளவன் தான் பிற்படுத்தப் பட்ட சமுதாயம். 9001 ரூபாய் அவனுக்கு வருமானம் வந்தாலும், அவன் முன்னேறிய சமுதாயம் என்கின்ற ஓர் அதி அற்புதமான, அதிசயமான, கோமாளித்தனமான ஓர் ஆணை 79ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது.

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஏன் இந்திரா காங்கிரஸ் கட்சியிலே உள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் இத்தனைக் கட்சிகளும் அன்றைக்கு ஒருங்கிணைந்து தமிழகம் முழுவதும் ஒரு பெரும் கிளர்ச்சியை நடத்தின.

திராவிடர் கழகத்தின் சார்பில் தளபதி வீரமணி அவர்களுடைய அறிவிப்பிற்கிணங்க அந்த ஆணையே கொளுத்தப்பட்டு, கொளுத்தப்பட்ட அந்த ஆணை உத்தரவினுடைய சாம்பல்

கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான இடங்களிலே இருந்து அந்தச் சாம்பல் பொட்டலங்கள் சென்ற போது, இன்று மகிழ்கிறோமே நிதி அமைச்சர் நாவலர் சொன்னாரென்று, அந்த நாவலர், நிருபர்களிடத்திலே, ''நிறையப் பேர் இப்படிச் சாம்பல் பொட்டலங்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கோட்டையிலே உள்ள குரோட்டன்ஸ் செடிகளுக்கு நாங்கள் எருவாகப் போடுவோம்'' என்று சொன்னார்.

எந்த எரு போட்டு நாங்களெல்லாம் வளர்ந்தோம் என்பதை மறந்துவிட்டு, எந்த எரு போட்டு இந்த இனம் வளர்ந்தது என்பதை மறந்துவிட்டு, எந்த உரம் போட்டு இந்த இயக்கம் இன்றைக்கு உயர்ந்திருக்கிறது என்பதை மறந்துவிட்டு, எந்த உரம் போட்டு, எந்த எரு போட்டு இத்தகைய எழுச்சியைத் தாழ்த்தப் பட்ட - பிற்படுத்தப்பட்டவர்கள் பெற்று இருக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டு, நாவலர் அவர்கள் அந்தச் சாம்பலை எல்லாம் கோட்டையிலே உள்ள குரோட்டன்ஸ் செடிகளுக்கு எருவாகப் போடுவோம் என்று சொன்னார். அவர் மறந்து விட்டார். ஈரோட்டு எரு போட்டு வளர்ந்த எழுச்சிமிக்க இயக்கம் இந்த இயக்கம் என்பதையும், அந்த இயக்கத்தினுடைய முன்னோடி தளபதிகளிலே ஒருவராக நாவலர் அவர்களும் இருந்தார்கள் என்பதையும் மறந்து விட்டார். காரணம் சேருவார் தோஷம் என்பார்களே அதன் காரணமாக அப்படிச்சொன்னார்.

அந்தப் போராட்டம் மேலும் விரிவடைந்தது. நாடு தழுவிய போராட்டமாக ஆனது. பாராளுமன்றத் தேர்தல் வந்தது. மக்கள் தங்கள் தீர்ப்பை அளித்தார்கள். தி.மு.கழகம் ஒரு மறியல் போராட்டத்திற்கு நாள் குறித்து அறிவித்தது. அதற்குப் பிறகு 31 சதவிகிதம், 50 சதவிகிதம் என்கின்ற அளவிற்கானது.

'சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றார்கள். 50 சதவிகிதம் அளிக்கப்பட்டிருப்பது தவறு. அதை அகற்ற வேண்டுமென்று, இட ஒதுக்கீட்டுக்கு எதிரியாகப் சில பேர் உச்ச நீதிமன்றம் வரையிலே சென்றார்கள். உச்ச நீதிமன்றத்திலே அளிக்கப்பட்ட

தீர்ப்பின் அடிப்படையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழு ஒன்றை அமைக்க இந்த அரசு முன் வந்தது. அந்தக் குழுவிற்கு திரு. அம்பாசங்கர் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அம்பாசங்கர் தலைவராக நியமிக்கப்பட்ட அடுத்த சில நாட்களுக்கெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாரதிவிழா ஒன்றில் பேசுகிறார். 17.12.82ல் அதற்கு ஒரு ஐந்து நாட்களுக்கு முன்புதான் அம்பாசங்கர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எதற்காக? இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். 50 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை செல்லாது, இட ஒதுக்கீடு தகுதி - திறனையெல்லாம் கெடுத்துவிடும், என்கின்ற அளவிலே சுப்ரீம்கோர்ட்டிலே வழக்கு; உச்ச நீதிமன்ற நீதிபதி அது குறித்துத் தீர்ப்பளித்ததற்கு முன்பு ஒரு குழு அமைத்து விவரங்களைத் தாருங்கள்'' என்று தமிழக அரசுக்குச் சொல்லுகிறார். தமிழக அரசு அம்பாசங்கர் தலைமையிலே ஒரு குழுவை நியமிக்கிறது. அந்தக் குழு நியமிக்கப்பட்ட ஐந்தாவது நாளோ அல்லது ஆறாவது நாளோ 17.12.82ல் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பாரதி விழாவிலே பேசுகிறார்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய இட ஒதுக்கீட்டு முறைக்கு ஆதரவாகப் பேசினாரா? இல்லை.

'வருமான வரிசெலுத்த வேண்டாதவர்களைப் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகக் கருதி அவர்களுக்கு சலுகைகள் அளிக்க ஒரு திட்டம், தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இதைவிட ஆபத்து வேறு என்ன இருக்க முடியும்)

தமிழ்நாட்டில் வருமானவரி கட்டுகின்றவர்கள் நூற்றுக்கு இரண்டு பேர் அல்லது மூன்றுபேர் தான் இருப்பார்கள். எம்.ஜி.ஆரினுடைய கணக்குப்படி வருமான வரிக்கட்டாதவர்கள் எல்லாம் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றால் மீதமுள்ள 97 சதவிகிதம் அவர்கள் பிறப்படுத்தப்பட்டோராக இருந்தாலும் பார்ப்பனராக இருந்தாலும் அந்த 97 பேரும் இந்த ஒதுக்கீட்டிற்கு உரியவர்கள்.

எனவே பொருளாதாரத் துறையில் வருமானவரி கட்டுகிறான். வருமான வரி கட்டாதவன் என்று சிரித்து, வருமான வரி கட்டாதவர்கள் நாம் பிற்படுத்தப்பட்டோர் என்று அறிவித்தது. அவர்களுக்குச் சலுகைகள் வழங்க அரசு யோசிக்கிறது என்று சொன்னார்.

அதே விழாவில் இன்னொற்றையும் சொன்னார்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிப்பயிற்சி கொடுத்து மக்களவர்களுடன் போட்டியிடச் செய்யலாமே ஒழிய - தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனி இடஒதுக்கீடு கூடாது என்று எங்கள் அமைச்சரவை விரும்புகிறது.

இதைவிட வேதனை என்ன இருக்க முடியும்? இவரே ஒரு குழுவை நியமித்துவிட்டு, உச்சநீதிமன்றத்தில் இந்த அரசின் ஆணைக்கு எதிராகப் போடப்பட்ட வழக்கு நடைபெற்று கொண்டிருக்கும் போது, அரசுக்குச் சாதகமாக ஒரு குழுவினுடைய அறிக்கையை பெறவேண்டிய முதலமைச்சரே, அசரங்கத்தினுடைய உத்தரவுக்குப் பாதகமாக அந்தக் குழுவின் தலைவர் செயல்பட வேண்டும் என்று மறைமுகமாகத் தூண்டி விடுகின்ற அளவிற்கு, பாரதிவிழாவில் பிற்படுத்தப்பட்டோர் என்றால் பொருளாதார அடிப்படைதான்; வருமான வரி கட்டுவோர், கட்டாதவர் என்ற அடிப்படையில்தான்; தாழ்த்தப் பட்டோர் என்றால் அவர்களுக்குப் பயிற்சிகொடுத்து ஊக்கப் படுத்தலாமேயல்லாமல், அவர்களுக்கு இடஒதுக்கீடு என்பதே கூடாது என்று அறிவிக்கின்ற ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம். அவரை நம்பி நாவலரும் நேற்றைக்கு அறிவித்திருக்கிறார். நாவலரை நம்பி என்று எதிர்காலம் என்ன ஆகுமோ தெரியவில்லை; இருளாகத் தெரிகிறது.

ஆனாலும் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.இன்றைக்கு எந்த முடிவுகள் எடுத்தாலும்,இட ஒதுக்கீட்டு முறைக்கு எந்த ஆபத்து வந்தாலும், நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ''கொக்கென்று நினைத்தாயோ கெங்கணவா'' என்பதைப் போலத் தமிழகத்தை குஜராத் என்று நினைத்தாயோ

என்று கூறுகின்ற அந்த விடுதலைப்படையாகத் திராவிடர் என்று கூறுகின்ற அந்த விடுதலைப்படையாகத் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இருக்கும் என்பதை மாத்திரம் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராஜீவ்காந்தி சொல்லியிருக்கிறார். பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. 'இந்த இட ஒதுக்கீட்டு பிரச்சனையில் அகில இந்திய அளவில் சிந்தித்து ஒரு முடிவெடுக்கலாம்' என்ற கருத்தை அவர் சொல்லியிருக்கிறார்.

இடஒதுக்கீட்டில் பெரியாருடைய எண்ணம் என்ன? அண்ணாவினுடைய எண்ணம் என்ன? அவர்களுடைய எண்ணம் எந்த அளவுக்கு இந்தத் தமிழகத்திலே ஊன்றப்பட்டுக் கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் அந்த வழியை வளர்த்து வருகிறோம். அப்படி பக்குவப்பட்ட மண்ணில் குஜராத் சேட்டைகள், நடைபெறுமேயானால், நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், குஜராத்தில் இடஒதுக்கீடு வேண்டாம் என்றவர்கள் ஒரு முதலமைச்சரை நீக்க முடிந்தது. ஆனால், தமிழகத்தில் அதற்கு நேர்மாறாக இட ஒதுக்கீடு வேண்டும் என்பவர்கள் ஒரு முதலமைச்சரை நியாயமாக வீட்டிற்கு அனுப்புவார்கள் என்பதை எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணாவினுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு நடைபெறுகிற ஆட்சியில் அண்ணா சொன்ன கருத்துக்களை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

50 ஆம் ஆண்டு இந்த இடஒதுக்கீடு முறைக்கு அல்லாடி போன்றவர்களால் ஆபத்து வந்த போது அண்ணா 'திராவிட நாடு' பத்திரிகையில் எழுதினார். ''உள்ளது ஒரு கம்பு - இருவர் கேட்கின்றனர்! எனக்கு, உனக்கு என்று.

ஒருவன், கரடு முரடனா பாதையிலே கடும் வெயில் வேளையிலே, பாரமான சாமான்களைப் பாதியில் வந்ததால், களைத்து கால் கடுத்துப்போய், ஊன்றுகோல் கிடைத்தால் ஒழிய

நடந்து செல்ல முடியாத நிலையில் உள்ளவன். மற்றவனோ உல்லாச நடை நடக்கும்போது அந்தக் கம்பு தன்னிடமிருந்தால் அலங்காரமாக, அந்தஸ்தாக இருக்குமென்ற எண்ணத்துடன் இருப்பவன் - இருவரில், கம்பு - யாருக்குத் தரப்பட வேண்டும்?''

நடக்கக் கஷ்டப்படுகின்ற அந்தப் பாட்டாளிக்கு ஊன்று கோலாக கம்பைத் தருவதா? அல்லது உற்சாகத்திற்காக - உல்லாசத்திற்காக அலங்காரமாகக் கையிலே சுழற்றிக் கொண்டு போகின்ற கணவானுக்குக் கம்பைத் தருவதா? அண்ணா அன்றைக்கே கேட்டார். அந்தக் கம்புதான் இட ஒதுக்கீடு - கம்யூனல் ஜி.ஒ. - என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. இதை யாருக்குத் தரப்போகிறோம்'' ஐம்பதிலே அண்ணா இந்தக் கேள்வியை எழுப்பினார். ''திராவிடர் நாடு'' ஏட்டின் மூலம்.

வடசென்னையிலே தந்தை பெரியார் அவர்கள் இந்த கொள்கைக்கு ஆபத்து வந்த நேரத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் போர் முழக்கம் செய்தார். அதைத் தொடர்ந்துதான் இடைக் காலத்திலே ஒரு பெரு வெற்றியினை - இட ஒதுக்கீட்டில் நாம் பெற முடிந்தது.

சமூக நீதியைப் பற்றி அறிஞர் அண்ணா மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

''ஒநாயை, வேட்டைக்காரன் கொன்றுவிடாமல் பாதுகாப்பது அல்ல நீதி. ஒநாய், ஆடுகளைக் கொன்றுவிடாமல் பாதுகாப்பது தான் நீதி.''

எவ்வளவு பொருள் பொதிந்த வாசகம்.

இந்த நீதியைத்தான் இன்றைக்குத் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் உங்கள் மத்தியிலே எடுத்து வைக்கின்றது.

அண்ணா, அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அமைச்சர் களுக்குச் சொன்ன வாசகம், இன்றைக்குள்ள அமைச்சர்களுக்கும் பொருந்தும்.

நான் சரித்திரத்தை உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டுமே யானால், அன்றைக்கு சென்னை மாகாணம் - தமிழ்நாடு அல்ல -

இந்தச் சென்னை மாகாணத்திலே இருந்த காங்கிரஸ் அமைச்சர்கள் கூட இட ஒதுக்கீட்டு முறைக்கு அல்லாடியால் ஆபத்து வந்தபோது பதைத்துப் போனார்கள். காமராசர் கூட பதைத்தார். ஆனால் "பெரியாருக்கு இதிலே என்ன கவலை? நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று கூடச் சொன்னார். அதற்குப் பெரியார் கூட ரொம்பூர் பொதுக்கூட்டத்தில், எனக்கு இல்லாத கவலை இதிலே யாருக்கு என்று காமராசருக்குப் பதிலளித்தார்.

அண்ணா அவர்கள், அன்றைக்குக் காங்கிரஸ் அமைச்சர்களே கூட இட ஒதுக்கீட்டு முறைக்கு ஆதரவாக இருந்தாலும் அவர்களை எச்சரிக்கை செய்ய இவ்வாறு எழுதினார்.

"அமைச்சர்கள், சட்டசபையிலேயும், வெளியிலேயும் இந்தக் கம்யூனல் ஜி.ஓ. வைப் பலமாக ஆதரித்துள்ளனர். எனவே, இந்தத் திட்டம் அழியாதபடி பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. அந்தப் பொறுப்பை மறப்பது பண்பாகாது. தட்டிக் கழித்துவிட முயல்வது ஆண்மையாகாது. நாம் என்ன செய்வது என்று பேசுவது அறிவுடைமை ஆகாது. உள்ள உறுதியுடன் அமைச்சர்கள் இந்த நிலையை மாற்றி அமைக்க வழி கண்டாக வேண்டும். இப்போதாகிலும், இடிமேல் இடிப்பட்ட பிறகாவது, யார் வகுப்புவாதிகள் -எது வகுப்பு வாதம் - என்று நாட்டுமக்களுக்கு எடுத்துக் கூற முன் வரவேண்டும்."

என்று அண்ணா அன்று அமைச்சர்களுக்குச் சொன்னது இன்றும் பொருந்துகிறதா இல்லையா என்று எம்.ஜி.ஆரை அல்ல; நாவலரையும் அவரைப்போல் இந்த இட ஒதுக்கீட்டு முறையில் இதயமார்ந்த எண்ணம் கொண்டிருக்கின்ற வேறுபல அமைச்சர்களையும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் சொன்னார்.

"மாகாண சர்க்கார், மக்களின் எதிர்காலத்துக்காக வகுப்பு நீதிக்காக, எவ்வளவு கஷ்ட நஷ்டத்தையும் ஏற்கத் தயார் என்றுடெல்லி உணரும்படி செய்ய வேண்டும்.

பதவியை உதறித் தள்ளும் துணிவு ஏற்படவேண்டும் இந்த அமைச்சர்களுக்கு; இவர்களிடம் நாடு இவ்வளவும் எதிர்பார்க்கிறது; தன்மானத்தை இழக்காதிருக்க வேண்டுமென்று கூறுகிறது - என்ன செய்யப் போகிறார்கள்?''

என்று அண்ணா அன்றைக்கு இட ஒதுக்கீட்டு முறைக்கு ஆதரவு தந்த காங்கிரஸ் அமைச்சர்களைப் பார்த்து இவ்வளவு கடுமையாக எச்ணாசரித்தார். அந்த எச்சரிக்கை இன்றைக்கும் பொருந்தும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

இடையிலே, நேர்முகத் தேர்வு இனி இல்லை. நுழைவுத் தேர்வுதான் என்கின்ற ஒரு சங்கடம் புகுத்தப்பட்டபோது, அப்போதும் திராவிடர் கழகம் திராவிட முன்னேற்றக்கழகம் பிற்படுத்தப்பட்ட மக்களடைய நலனில் அக்கறையுள்ள வேறு பல கட்சிகளைச் சார்ந்த பெரியவர்கள் இந்த நுழைவுத்தேர்வு வேண்டாம் என்று கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

நான் தொடர்ந்து 'விடுதலை' பத்திரிகை படிப்பவன். நீங்கள் எத்தனை பேர் படிக்கிறீர்களோ எனக்குத் தெரியாது. நான் தொடர்ந்து படிப்பவன்; வராவிட்டாலும் தொலைபேசி முலமாக கேட்டுப் பெற்றுப் படிப்பவன்.

17.4.1982இல் திருச்சியில் பெரியார் சொன்ன மருந்தியல் கல்லூரி திறப்பு விழா. அதில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் பேசுகிறார். என்ன பேசுகிறார் தெரியுமா?

''நேர்முகத் தேர்வை ஒழித்து விட்டு, நுழைவுத் தேர்வு வைக்கும் யோசனை ஒன்றும் எங்கள் அரசிடம் இல்லை. நுழைவுத் தேர்வு வைத்தால் பட்டினத்து மாணவர்கள் மட்டும்தான் பயனடைவார்கள். கிராமத்திலிருந்து படிக்கவரும் மாணவர்களுக்கும் முதல் தலைமுறையாக படிக்கவரும் மாணவர்களுக்கும் நுழைவுத்தேர்வு என்பது பெரும் இடையூறாக இருக்கும். தற்போதுள்ள நேர்முகத் தேர்வு (இன்டர்வியூ) முறையே நீடிக்கும்.

இது டாக்டர் ஹண்டே 82ஆம் ஆண்டு பெரியார் பெண்கள் மருந்தியல் கல்லூரி விழாவில் - அது வீரமணி அவர்கள் முன்னின்று நடத்திய விழா - அதற்காகப் பேசினாரோ என்னவோ -அங்கு டாக்டர் ஹண்டே இந்தக் கருத்தைச் சொல்லி இருக்கிறார்.

ஆனால் அதை மறுத்துக் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் என்ன பேசினார் தெரியுமா?

"நுழைவுத் தேர்வால், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாண வர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்" என்று.

ஹண்டே சொல்கிறார். பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், கிராமபுறத்து மாணவர்களும் இந்த நுழைவுத் தேர்வால் பாதிக்கப் படுவார்கள் என்று. அவர் கழற்றிப் போட்ட, பூணூலை எடுத்து அரங்காநயம் போட்டுக் கொள்டு, "இந்த நுழைவுத் தேர்வால் தாழ்த்தப்பட்ட -பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். என்று இவர் பேசுகிறார் என்றால், ஏ! தமிழ்ந்த தமிழகமே! என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அண்ணா பேசினாரே அந்தச்சொற்றொடர் நமக்கு நினைவுக்கு வரவில்லையா? இதைத்தான் நான் உங்களைக் கேட்கிறேன்.

அப்படிப்பட்ட ஓர் இன உணர்வற்ற ஒரு அரசு, தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுடைய எதிர்காலத்தைப் பற்றி ஒழுங்காகச் சிந்திக்காத அல்லது சிந்திக்க எண்ணிடாத ஒரு அரசு இன்றைக்குத் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக் கிறது என்பதற்காகத் தான் இதை நான் சொல்கிறேன்.

குஜராத் சம்பவங்களையொட்டி, 'இந்தியா டுடே' பத்திரிகையில் ஒரு கருத்து எழுதப்பட்டது. 15.4.1985இல் அந்தக் கருத்தை எழுதும்போது அந்த பத்திரிகையிலே சொல்லுகிறார்கள்.

"The Anti reservation feeling had already been perked up by Prime Minister Rajiv Gandhi's rather cryptic statement at Hyderabad that reservation had been provided for a certain purpose which they have failed to server and the whold question requires a new loo..

சமீபத்தில் ஐதராபாத்தில் கூட ஒதுக்கிட்டிற்கு எதிர்ப்பாக ராஜீவ்காந்தி அவர்கள் பேசிய அதிர்ச்சி தரக்கூடிய பேச்சினால் தான், இதை அகில இந்தியா தழுவிசிய ஒரு பிரச்சனையாக எடுத்துக்கொணடு இதற்கு ஒரு புதிய பார்வை - ஒரு புதிய திருப்பம் - ஒரு புதிய கண்ணோட்டம் இவைகளோடு இந்த இட ஒதுக்கீட்டைக் காண வேண்டும் என்று ராஜீவ்காந்தி சொன்னாரே அதுதான் - அவர்தான் இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு கெல்லாம் வித்திட்டார்' என்று குற்றம் சாட்டுகின்ற வகையில் இந்தியா டுடே எழுதியிருக்கின்றது.

ஆனால் ராஜீவ்காந்தி அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். இப்போது என்ன புதிதாக இதைப் பற்றிச் சிந்திப்பது? சிந்தியுங்கள்; வேண்டாமென்று சொல்லவில்லை. இந்தியா முழுமைக்கும் இது குறித்து ஒரு NEW LOOK ஒரு புதிய பார்வை - ஒரு கண்ணோட்டம் வேண்டுமென்று சொல்கிறீர்கள். தயவு செய்து இந்த விஷயத்திலாவது தமிழ்நாட்டைத் தனித்து விட்டு விட்டு சிந்தியுங்கள். இதையும் சேர்த்துச் சிந்திக்காதீர்கள். இப்படி சொல்வதால் தமிழ்நாடு தமிழருக்கே என்ற கோஷத்தின் அடிப்படையிலே சொல்லவில்லை.

எப்படி இந்திப் பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வை மதித்து இன்னமும் நீங்கள் பயந்து பயந்து ஒளிந்து ஒளிந்து மறைந்து மறைந்து நடந்து கொள்கிறீர்களோ, அதைப் போலக் கூட அல்ல; பட்டவர்த்தனமாகச் சொல்கிறேன்.

நீங்கள் அகில இந்தியாவில் ஒரு New Look இந்த இட ஒதுக்கீட்டு முறையிலே பின்பற்ற வேண்டுமென்று விரும்பினால், தமிழ்நாட்டை வம்புக்கு இழுக்காதீர்கள். இழுத்தால் ஆப்பசைத்த கதையாக ஆகி விடும் என்பதை மாத்திரம் இளம் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்கு திராவிடர் இயக்கத்தினுடைய அறுபது ஆண்டு கால வரலாற்றின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

ராஜீவ்காந்தி அவர்களே, உங்களுடைய தாத்தா (பண்டித ஜவகர்லால் நேரு) என்ன சொன்னார்? 2.12.54ல் காங்கிரஸ்

பார்லிமெண்ட் பார்ட்டி மீட்டிங் (பாராளுமன்றத் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டம்.) அன்று பேசும் போது குறிப்பிட்டார்.

"I will lay special emhasis on casteism, because it is the most dangerous tendency. We talk about casteism and we condemn it as we should. but the fact remains that a half dozen or may be tan so-called superior castes dominate the Indian scene among the Hindus' There is no doubts about it. If we do not equalise or tend to equalise, undoubtedly casteism will flourlish in a most dangerous way"

ஒரு அரை டஜன் பத்து உயர்ந்த ஜாதிக்காரர்கள் இந்தியாவிலேயே இந்து மதத்தில் இன்றைக்கு ஆதிபத்தியம் செலுத்திக் கொண்டிருக்கின்ற சாதிக்காரர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்கள் தொடர்ந்து அவர்களுடைய சாதியை வலியுறுத்திக் கொண்டு இருப்பார்களேயானால், ஒரு சமத்துவம் - ஒரு சமநீதி - சாதிக்களுக்கிடையே தருவதற்கு அவர்கள் மறுப்பார்களேயானால் அது மிகவும் ஆபத்தான வழியாக ஆகிவிடும்'' என்று ஜவகர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள்.

அது மாத்திரமல்ல; 68ஆம் அண்டு சென்னையிலே இருந்து ஒருவர் இந்த இட ஒதுக்கீட்டை மறத்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"A caste is also a class of citizens and if the caste as a whole is socially and educationally backward reservation can be mad in favour of such caste within the meaning of article 15 (4)."

என்று சுப்ரீம்கோர்ட் தெளிவாக இந்த இட ஒதுக்கீட்டை ஆதரித்து அன்றைக்குக் கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

அதைவிட ராஜீவ் காந்தி அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என் கையிலே இருப்பது 1981ஆம் ஆணடு மார்ச் திங்கள் 18ஆம் நாள் பாராளுமன்ற நிறைவேற்றிய தீர்மானம். ஏன் இந்தத் தீர்மானத்தைப் பாராளுமன்றம் நிறைவேற்ற வேண்டிய நிலைமைக்கு வந்தது என்றால், 81ஆம் அண்டு இன்று சோதனைக்கு ஆளாக்கப்பட்டாரே சேடலங்கி

இவர் அன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு 5 சதவிகித இட ஒதுக்கீடு தந்தார். அவ்வளவுதான். இப்போது தந்தது 10 சதவிகிதத்தை 18 அதிகமாக்கி 25ஆக ஆக்கினார்கள். வெளியே அனுப்பி விட்டார்கள். அதுதான் சோலங்கி செய்த தவறு. கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான பிணங்கள் அங்கே விழுந்து சேடலங்கி அப்புறப்படுத்தப்பட்டு விட்டார்.

அவரேதான் 81ஆம் ஆண்டு இறுதி பொறுப்பிலே இருந்த பொழுது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 5 சதவிகிதம் என்று இட ஒதுக்கீடு செய்தார். அதையும் அங்குள்ள உயர் சாதிக்காரர்கள் ஆதிக்கக்காரர்கள் எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தினார்கள். ஐந்தாறு பிணங்கள் அப்போதும் விழுந்தன.

அதைத் தொடர்ந்து 81ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இந்தத் தீர்மானம் வந்தது.

அந்தத் தீர்மானத்தினுடைய முகப்பு வாசகம் என்ன தெரியுமா?

"That this House expresses its concern and anguish over the situation prevailing in Gujarat over the reservation issue. It reiterates its firm commitment to the national policy on' reservations as enshrined in the constitution!

''இட ஒதுக்கீடு குறித்த குஜராத் பிரச்சனையில் இந்தப் பாராளுமன்றம் தனது கவலையையும் வேதனையும் தெரிவிப்பதோடு, அரசியல் சட்டத்திலே இட ஒதுக்கீடு குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ள தேசியக் கொள்கையில் இந்த அவை தனது உறுதியை மீண்டும் வலியுறுத்தி தெரிவிக்கிறது.''

என்று நாடாளுமன்றத்திலே 81ம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதற்குப் பிறகு ராஜீவ் காந்தி New Look என்கிறார். அப்படியானால் உங்களுடைய அம்மா இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் காலத்தில் நிறைவேற்றப்பட்ட நாடாளுமன்றத் தீர்மானத்தை நீங்கள் தூக்கி ஏறிய முனைகிறீர்களா?

அப்படிப்பட்ட துணிவோடு நீங்கள் அந்தச் செயலில் இறங்கப் போகிறீர்களா? இறங்குங்கள் வேறு மாநிலத்தோடும் மோதுங்கள். ஆனால் தமிழ்நாடு பெரியாரும் அண்ணாவும் பக்குவப்படுத்திய மண். அதை மாத்திரம் மறந்து விடாதீர்கள். இன்றைக்கு இதை போதிய அளவில் சிந்திப்பதற்குத் தயார் என்று நாங்கள் தேசிய அளவில் மீணடும் சந்திப்போம். இரு மொழித் திட்டம் அதெல்லாம் வேண்டாம். மீண்டும் அவைகளைப் பற்றி சிந்திப்போம் என்று அழைப்பீர்கள். அப்படியே நீங்கள் அழைக்க ஆரம்பித்தால் எங்கள் எதிர்காலம் என்ன ஆகும் என்று எங்களுக்குத் தெரியும்.

எனவேதான், தந்தை பெரியார் அவர்களுடைய படத்தைத் திறக்கிற நேரத்தில் நாளைய தினம் இடஒதுக்கீடு மாநாட்டில் இது குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் கழகத்தினுயை கொள்கைகளை, தொடர்ந்து நாளைக்கும் ஒலிக்க இருக்கிறார். தளபதி வீரமணி அவர்களும் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல இருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் வழிவகுத்து எந்தச் சோதனைகள் வந்தாலும் இந்த இனத்தை, இனமானத்தைக் காப்பாற்ற நம்மைத் தயார்ப்படுத்தித் தந்த தலைவனுடைய படத்தைத் திறக்கிற நேரத்தில் அந்த மாபெரும் மேதை மறைந்ததையொட்டி நடைபெற்ற ஒருநினைவு நாள் கவியரங்கத்தில் நான் எழுதிப் பாடிய கவிதையை மாத்திரம் படித்துவிட்டு என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன்.

அந்த கவிதை பின்வருமாறு:

திருவரங்கப் பெருமான் போல் படுத்திருந்த தமிழ்
உணர்வைத்
திசையெட்டும் சிலிர்த்தெழுந்து முழங்கச் செய்து
தீரமிகு பணிகள் பல ஆற்றியவர் பெரியார் அன்றோ?

தெருவரங்கம், கலையரங்கம், இசையரங்கம், திரையரங்கம்
எல்லாமே 'அம்மாமி அத்திம்பேர்'

ஜலதரங்கம்; அதுமாற்றித்
தமிழ் அரங்கம், தனி அரங்கம் கண்டவர்களுக்கு
கவியரங்கம் பாடுவது பொருத்தமன்றோ? அதனால்தான்
''பயிர் போன்றோர் உழவருக்குப் பால் போன்றோர்'
குழந்தைகட்குப் பசும்பால் கட்டித்
தயிர் போன்றோர் பசித்தவர்களுக்குத் தாய் போன்றோர்'
ஏழையர்க்குத் தகுந்தவர்க்குத்
செயிர் நீர்த்த மக்கட்கெல்லாம் உயிர் போன்றோர்'' என்று
பாரதிதாச வேந்தன் பாடிச்சென்றான் - அவரை;
வீடுகட்டிஅதற்குள்ளே வைக்கோலைத் திணிப்பதுவோ,
வீடு கட்டாமலே வைக்கோற்போர் போடலாமே
எனச் சொன்ன ஈ.வே.ரா. நாத்திகரா? இல்லை, இல்லை;
இயற்கையின் புதல்வர் - இந்த மண்ணை மணந்த மணாளர் -
எதிர்காலத் தமிழகத்துப்பெருமைக்குத் தூதர்'' என்று
அக்ரகாரத்து அதிசய மாமனிதர் வ.ரா.முன்பு
அழகாக வரைந்தார் ஒரு கட்டுரைதான்!
தங்கத்தின் உருக்கில் வந்த தனித்ததோர் ஒளியைப்போல
செங்கதிர் உதயமாகும் செவ்வானம் வெட்கியோடப்
பொங்கியே எழுந்தார் பெரியார், புதுமைக் காளைகள் கோடி
உறுதியாய்க் கூறி நின்றார் குருதிதான் பயணமென்று
அங்கத்தில் பழுதென்றால் அறுத்தெறிய ஒப்புகிறோம்,
உயிர்பிழைக்கப்
பங்கமுறு சாதிமதப் பேதங்களால் அல்லலுறும் - மனித
சங்கத்தின் நோய்களைத் திகைக்கின்றோம் சரிதானா? ''
எனக் கேட்டார்.

அந்தச்
சிங்கத்தின் குரல் கேட்டுச் சிறுநரிகள் ஊளையிடக் கதைதானே
நடந்ததிங்கே;

வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கைபோல் நிமிர்கின்ற பார்வை உண்டு
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு - வெண்
சங்கொத்த கண்களிலே விழியிரண்டும் கருவண்டு - அதில்
சாகும்வரை ஒளி உண்டு;
பம்பரமும் ஓய்வு பெறும் சுற்றிய பின் - இவரோ
படுகிழமாய்ப் போன பின்னும் பம்பரமாய்ச் சுற்றி வந்தார்.
எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்க வைக்கும் இடிஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக் கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச்சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சு நகர் சாகர்டீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைர நெஞ்ச வால்டேராய்
எம் தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்; இன்றைக்கோ
இறப்பின் மடியினிலே வீழ்த்திட்டார்.
மதுவிலக்குத் தேவை என்று மகாத்மா காந்தி சொன்னவுடன்
மதுக்கலயம் கட்டாமல் இருப்பதற்குத் தோட்டத்தில்
மண்டி நின்ற தென்னைகளை வெட்டிச் சாய்த்தார்
வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?'
''வை, கத்தி; தீண்டாமைக் கழுத்தில்'' என்று
வரிப்புலியாய்க் களம் சென்று வாகை சூடி
வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம் வீரர்
காங்கிரசுக் கட்சிக்கு மீகாமனாய்க்
கதர் இயக்க வெற்றிக்குத் தளபதியாய்க்
காந்தி வழி நின்றிட்ட கர்மவீரன்
கட்சிக்குள் போராடக் காலம் வந்து
காஞ்சிபுரம் மாநாட்டில் வெளிநடந்தார்.
வ.வே.சு.அய்யர் என்பார் வடிகட்டிய தேசபக்தர்
வகுப்பு வாத உணர்வாலே வம்புக்கு அழைப்புத் தந்தார்.

சேரமன்மாதேவி ஊரில் சிறந்ததொரு குருகுலத்தில்
ஒரு குலத்துக்கொரு நீதி கடைப்பிடித்தால்
சகிக்குமா பெரியார் மனம்? சமருக்கு வில் வளைத்தார்.
சரித்திரம் படைக்கலுற்றார்; அதன் விளைவாய்த்
தன்மான இயக்கத்தின் தந்தையாகத் தமிழர் இனப்
பாதுகாப்புத் தலைவராகப் பெரியார் ஆனார் - புது
நெறியாளர் ஆனார்; பிற்பட்டோர் நலனுக்கென்று
நீதிக்கட்சி பெரும்பணிகள் இயற்றிடவே முனைந்தபோதும்
- அது பித்தாபுரம் பனகல் என்று பிரபுக்கள் காலடியில்
வற்றாத செல்வந்தர் கைத்தடியில்
இருந்ததாலே அதைமாற்றி
மாளிகையில் இருந்த கட்சி மக்களிடை வருவதற்கு
மாமேதை அண்ணாவின் துணையுடனே வெற்றி கண்டார்
மந்தி கை மாலையென
இந்தி கைத் தமிழர், ஆக
வஞ்சகச் சூழ்ச்சிகள் வலையாக விரித்தபோது
அஞ்சிடா நெஞ்சு கொண்டு அறுத்தவர் பெரியார்தானே.
அவர்,
பாதம், படாத பட்டி தொட்டி உண்டோ - அவர் பேர்க் கேட்டுக்
காதம் ஓடுகின்ற ஆத்திகரும் (அவர்) பேசக் கேட்டால், தமிழ்க்
கீதம் கேட்ட கிறுகிறுப்பில் மயங்கிப்போவார்.
அறிவு மழை பொழியும் எழில்
வழியும் - இருள் கழியும்
தெளிவுமிகு உரைகள் பல
ஒளிரும் திறன் மிளிரும் -
கடலின்மடை அலையின் ஒலி - மலையின் முடி -
தழுவும் முகில் வழியும்;
அறிவு மழை பொழியும்;
ஆணவங்கள் அழியும்;
அடிமை முறை ஒழியும்.

அய்யாவின் பேச்சென்றால் அதிரசம் தின்பதுபோல்
கழகத்தவர்க்கு
அணுகுண்டு வெடித்தது போல் கயவர்கட்கு!
அவர் தலைமை ஏற்று நானும் அவருடனே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில்'
ஆரூரில் மாணவனாய் இருந்தபோதே இணைந்து விட்டேன்
அதன்பிறகு புதுவையில் நான் தாக்குண்டபோது
அய்யாவின் கையாலே மருந்திட்டார், என் காயத்திற்கு,
குடியரசு அலுவலகக் குருகுலத்தில்
கொள்கை வழிப்பாடங்கள் பயின்ற காலை - நான்
தமிழரசுத் தலைவனாக வருவேன் என்றும், எனை வளர்த்த
தந்தைக்கு அரசு மரியாதையுடன், இறுதி வணக்கம்
செய்வேன் என்றும்,
எண்ணியும் பார்த்ததில்லை;
''பாராட்டிப் போற்றி வந்த பழைமை லோகம்
ஈரோடுப் பூகம்பத்தால் இடியுது பார்;
ஈவெரா என்ற வார்த்தை இந்நாட்டு வஞ்சகத்தின்
அடிபீடம் ஆட்டுகின்ற சூறாவளியாம் - அவர்
வெண்தாடி அசைந்தால் போதும்,
கண்சாடை தெரிந்தால் போதும்-
கறுப்புடை தரித்தோர் உண்டு - கொடையை'
நறுக்கியே திரும்பும் வாட்கள்''
ஈரோட்டுக் குருகுலத்தில் நான் இயற்றியது இப்பாடல்
இன்றைக்கும் நினைக்கின்றேன் - பெரியார்
இளவயதில் மறையவில்லை
நிறைவயது வாழ்த்துவிட்டே ஓய்வுகொண்டார் எனினும்
தாஜ்மகால் திடுமெனத் தரைக்குள்ளே போய்விட்டால்
அதைக்கட்டி, ஆண்டு பல ஆயிற்றே என்று ஆறுதல்தான்
பெறுவோமோ?
தஞ்சைக் கோபுரம் சாய்ந்து விட்டால் அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்

தாக்குதல்தாம் எளிதாமோ? இவரோ,
தஞ்சைக்கோபுரம் போல் உயர்ந்தவர்,
தாஜ்மகால் போல் சரிதம் படைத்தவர்
அவர் வாழ்வார் வாழ்வார் என்று வாழ்த்துகிறேன்.

★ ★ ★ ★

(சேலம் மாவட்டம் ஆத்தூரில் 1.11.1981 அன்று தந்தை பெரியார் சிலையைத் திறந்து வைத்து கலைஞர் ஆற்றிய பேருரை.)

சேலம் ஆத்தூரில் அலைமோதுகின்ற இந்தப் பெரும் மக்கள் கடலின் நடுவே தமிழகத்தை விழிப்படையச் செய்த தன்மானப் பகலவன் தந்தைபெரியார் அவர்களுடைய திருவுருவச் சிலையினைத் திறந்து வைக்கின்ற பேறு பெற்றமைக்காக நான் பெருமை கொள்கிறேன் - பேருவகை அடைகிறேன்.

இந்தச் சிலை திறப்பு விழா, நீண்ட நாட்களுக்கு முன்பே ஏற்பாடு செய்யப்பட்டு தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்க நேரிட்டு, இன்றைக்கு எழுச்சிக் கோலத்தோடு உணர்ச்சிமயமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இலட்சிய நோக்கம்

தந்தை பெரியார் அவர்களுடைய சிலையை நாம் திறந்து வைக்கிறோம் என்றால், ஓர் உருவச் சிலையை, நகரின் நடுவே அனைவரும் பார்க்கத் தகுந்த இடத்தில் அமைத்து, தந்தை பெரியாரை நினைவுப்படுத்துகிறோம் என்பது மாத்திரம் பொருளல்ல.

எந்தக் கொள்கைகளுக்காக தன்னுடைய வாழ்நாள் எல்லாம் போராடினாரோ - எந்த இலட்சியங்கள் வெற்றி பெற வேண்டு மென்பதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டாரா - எந்த இனம் விழிப்புற்று எழ வேண்டும் என்பதற்காக எதிர்ப்புக் கணைகளையெல்லாம் மார்பிலே தாங்கி, தமிழகத்திலே வலம் வந்தாரோ - அந்த இலட்சியங்களும், கொள்கைகளும் நம்முடைய நினைவில் என்றென்றும் தங்கி இருக்கும்.

தங்கி இருக்கக் கூடிய அந்த இலட்சியங்களையும், கொள்கைகளையும் வெற்றி பெறச் செய்ய வேண்டிய தொடர் பயணத்தை நாமெல்லாம் மேற்கொள்ளவும், சூளுரை எடுத்துக் கொள்கின்ற நாளான இந்தச் சிலை திறப்பு விழா நாளை மாத்திரம் கருதாமல், பெரியார் அவர்களுடைய சிலையைப் பார்க்கிற நேரத்திலெல்லாம் அந்த எண்ணம் நம்மவர் உள்ளத்தில் எழவேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய சிலை திறப்பு விழாக்கள் தமிழகத்திலே, பட்டித்தொட்டியெல்லாம் பட்டனக் கரைகளிலெல்லாம் பல்லாண்டுக் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பெரியார் சொன்னது

தந்தை பெரியார் வழியில் - பேரறிஞர் அண்ணா வழியில் - தன்மானக் கொள்கைகளைத் தமிழனுடைய உள்ளத்திலே பதிய வைத்து இனமானம் காக்கக் கடுமையாகப் போராட வேண்டும்; அதற்கான பயிற்சியைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் பெரியார் அவர்களுடைய சிலையை நாம் ஆத்தூரிலே மாத்திரமல்ல; தமிழ்த் தரணியிலே பல்வேறு பகுதிகளில் திறந்து வைத்துக் கொண்டிருக்கின்றோம்.

ஒரு முறை, எனக்கு நினைவிருக்கிறது; தந்தை பெரியார் அவர்களே கூட நேரிலே இருந்து, அவருடைய முன்னிலை யிலேயே பெரியார் அவர்களது சிலை திறக்கப்பட்டபோது, அவர் சொன்னார்.

"என்னுடைய சிலைகளை (அதாவது பெரியார் அவர்களின் சிலைகளை) நிறையத் திறக்க வேண்டும். ஏன் திறக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்றால், இப்படிப்பட்ட கொள்கை களுக்காக வாழ்ந்த ஒருவன் இருந்தான், அவன் காலத்தால் பிரிக்கப்பட்டான் என்பதைக் கூற மாத்திரமல்ல. அவன் எதற்காக வாழ்ந்தான்? எப்படி வாழ்ந்தான்? என்ன கொள்கைக்காகச் சிந்தித்தான்? அதை எப்படிச் செயல்படுத்தினான் என்பதை நாடு புரிந்துகொண்டு, இந்த நாடு காடாக ஆகாமல் இருக்க அந்தச்

சிலைகள் பயன்படும். எனவே, என்னுடைய சிலைகளை இன்னும் ஏராளமாகத் திறவுங்கள்'' என்று தந்தை பெரியார் அவர்கள், ஒரு சிலை திறப்பு விழாப் பொதுக் கூட்டத்தில் பேசியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

பெரியார் இல்லாமலிருந்தால்

தந்தை பெரியார் அவர்கள் இன்று சிலையாக இருக்கிறார்.

தயவு செய்து கொஞ்சம் எண்ணிப்பாருங்கள்.

பெரியார் என்கிற ஒருவர் தமிழகத்தில்தோன்றாமலிருந்தால் அவருடைய பணி தமிழ்ச் சமுதாயத்திற்குக் கிடைக்காமல் போயிருந்தால் அவருடைய போராட்டங்கள் இந்தத் தமிழ் மண்ணிலே நடைபெறாமல் இருந்திருந்தால், இன்றைக்குத் தமிழன் எவ்வளவு தலை தாழ்ந்திருப்பான்? எந்த அளவுக்குத் தமிழன், பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் மதிக்கப்படக்கூடிய நிலையிலே இருந்திருப்பான் என்பதை தயவு செய்து எண்ணிப்பாருங்கள்.

இன்று அரசு அலுவலகங்களைப் பார்க்கின்றோம். அங்கே தமிழர்கள் ஏராளமானோர் பணியாற்றுகின்ற காட்சியினைக் காண்கின்றோம்.

தாசில்தார்களைப் பார்க்கின்றறோம், அவர்களில் பலர் தமிழர்களாக இருக்கிற காட்சிசையயும் பார்க்கின்றோம்.

அதைப் போலவே மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பார்க்கின்றோம். எல்லா இடங்களிலுமல்ல ஒரு சில இடங்களில் தமிழர்கள் இருப்பதைப் பார்க்கின்றோம்.

இப்படிப்பட்ட வேலைகளுக்கு அந்தக் காலம் முதல் இந்த காலம் வரை அவர்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்.

தந்தை பெரியார் பார்வையில்...

இவைகள் அனைத்தும், ஏதோ அவர்களுக்குக் கிடைத்த கிரகப் பலன்களால் அல்லது, அவர்களுக்கு ஏற்பட்ட சனிப் பெயர்ச்சியின் விளைவாய் அல்லது, குருப்பெயர்ச்சியின்

வினைவால் நாலாமிடமித்தில் இருந்த சந்திரன் அய்ந்தாமிடத் திற்குச் சென்ற காரணத்தால் அல்லது, சந்திரன் அவர்களுடைய திசையைப் பார்த்த காரணத்தால் தமிழர்களுக்கு ஏற்பட்டுவிட்ட ஆதாயங்கள் அல்ல. சந்திரனும், சூரியனும், சுக்கிரனும் பார்த்த பார்வையால் இந்தப் பவிசு தமிழனுக்கு ஏற்படவில்லை.

தந்தை பெரியார் என்கிற ஒருவர் பார்த்த பார்வையால்தான் தமிழனுக்கு இந்த ஏற்றம் கிடைத்திருக்கிறது.

திராவிடர் இயக்கம் என்றும், திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் இன்றைக்கு நம் சமுதாய இயக்கம் அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் முறையே பாடுபடுகிற இந்த இரண்டு இயக்கங்களை நடத்தி வருகிறோம் என்றால், இந்த இயக்கங்களுடைய அடிப்படை வரலாறு என்ன?

சாஸ்திரக் கூறு

ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு முன்பு, நீ மாடு மேய்க்கத் தான் லாயக்கு, பள்ளிக்குச் செல்ல அருகதை கிடையாது, அப்படித்தான் சாஸ்திரத்தில் போட்டிருக்கிறது என்று மாடு மேய்க்க மாத்திரம் ஒரு சாதி என்றும், மாளிகையிலே குடியிருக்க இந்தச் சாதிக்குத்தான் மகேஸ்வரன் அங்கீகாரம் அளித்திருக் கிறார் என்றும், பிரிக்கப்பட்டிருக்கிற கொடுமையைக் கண்டு அலறித் துடித்தார்கள்.

அவர்களால் பெரியாரைப்போல், அண்ணாவைப் போல் போராட முடியவில்லை. ஆனாலும், அவர்கள் கருத்துகளை மக்கள் மனதில் பதிய வைத்தார்கள்.

அன்றைக்கிருந்த ஆட்சியாளர்களிடம் முறையீடு செய்தார்கள். தங்களுடைய குறைகளை எடுத்துச் சொன்னார்கள். இவைகளை யெல்லாம் ஒருநிலைப்படுத்தித்தான் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்கள்.

அப்படி உருவாக்கப்பட்ட அந்த அமைப்பின் காலக்கட்டம் ஏறத்தாழ இன்றிலிருந்து எழுபது ஆண்டுகளுக்கு முந்தியது.

அதை ஓர் உவமையால் சொல்ல வேண்டுமென்றால் மழை வருவதற்கு முன்பு நீலவானத்தில் வெண் மேகங்கள் திரண்டு, பிறகு அவைகளெல்லாம் கருமேகங்களாக உருக்கொண்டது போன்ற காட்சி.

அதற்குப் பிறகுதான் இடி, மின்னல்.

அந்த இடிகளாகவும், மின்னல் தாக்குதல்களாகவும் பெரியாரும், அண்ணாவும் அந்த இயக்கத்திலே நுழைந்தார்கள்.

இடி, மின்னல்

அதற்குப் பிறகு மழை பொழிந்து, இன்றைக்கு இங்கு மழை பொழியுமோ பொழியாதோ எனக்குத் தெரியாது ஆனால், எழுபது ஆண்டுகளுக்கு முன்பு கொஞ்சம், கொஞ்சமாக குவிந்திருந்த மேகங்கள் எல்லாம் திரண்டு எதிர்ப்புகளைக் கலக்கிடும் இடியாகவும், இழிவுகளைத் தீய்த்திடும் மின்னலாகவும், தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் பொழிந்தார்கள்.

அவர்கள் பொழிந்த அந்த மழையினால் தான் சாதிக் குட்டிச் சுவர்கள் எல்லாம் கரைந்தன.

மூடநம்பிக்கை என்கிற தேவையற்ற புல், பூண்டுகள் எல்லாம் அழிந்தன.

அந்த மழையிலேதான் தமிழனின் கழனி நீர் நிரம்பியதாக நெல் நிரம்பியதாக உயர்ந்தது.

சுயமரியாதைப் பயிர் அதுதான் ஆயிரங்காலத்துப் பயிர் அந்த ஆயிரங்காலத்து பயிர்தான் இன்றைக்கு திராவிடர் கழகமாக, திராவிட முன்னேற்றக் கழகமாக ஒளிவிட்டுக் கொண்டிருக் கின்றன.

நாணயத்தின் பக்கங்கள்

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இவைகளை நான் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று கூடச் சொல்ல மாட்டேன். அது தவறு என்று நான் கருதுவதால் அல்ல.

எப்படி ஒரு ரூபாய் நாணயத்திற்கு இரண்டு பக்கம் தேவையோ அப்படித்தான் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும். ரூபாய் நாணயத்தினுடைய இரண்டு பக்கங்கள் என்று நான் ஆத்தூரிலே பெரியார் சிலை திறப்பு விழாவிலே பிரகடனப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிடர் கழகத்தினுடைய உணர்வு இல்லாமல் தி.மு.கழகம் இல்லை.

நான் அவர்களுக்குச் சொல்லமாட்டேன், தி.மு.கழகத்தின் உணர்வில்லாமல் திராவிடர் கழகம் இல்லையென்று நான் சொல்லத் தயாராக இல்லை.

கரன்சி நோட்டு

கரன்சி நோட்டுக்கு இரண்டு பக்கம் தேவை ஒரு பக்கத்தை மட்டும் அழகாகச் சுவரிலே ஒட்டி வைத்துவிட்டு, இந்த நோட்டு செல்லும் என்று சொன்னால் அது செல்லாது. ஏனென்றால் பின்புறம் ஒட்டப்பட்டு விட்ட காரணத்தால் அது பயன்படாது.

அது பயன்படாமல் போய்விட்ட காரணத்தால் என்னதான் அழகாக கண்ணாடிச் சட்டம் போட்டு வைத்தாலும் அந்த நோட்டு செல்லுபடியாகாது.

அதைப்போல திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் என்கின்ற இரண்டு புறத்தைக் கொண்ட இந்த கரன்சி நோட்டைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கிற வரையிலேதான் செல்லும்.

அதிலே திராவிடர் கழகம் என்று பகுதியைச் சுவரிலே ஒட்டிவிட்டு, பார்! பார்! தி.மு.கழகம் எவ்வளவு அழகாகத் தெரிகிறது என்று சொன்னால் திராவிடர் கழகம் என்கிற பின்பக்கம் இல்லாமல் தி.மு.கழகம் செல்லாது.

அதை உணர்த்திருக்கிறவர்கள் தான் இன்றைக்கு தி.மு.கழகத்திலே இருக்கின்றோம்.

ஆத்தூரில் கருணாநிதி இப்படிப் பேசிவிட்ட காரணத்தால், இதனுடைய விளைவு என்ன ஆகுமோ என்று யாராவது

அஞ்சுவார்களேயானால், அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன்.

வானொலி விஷமம்

வீரமணி சொன்னதைப் போல் தந்தை பெரியார் அவர்கள் மறைந்த நேரத்தில் வேலூர் மருத்துவமனையில் தந்தை பெரியார் மறைந்தார் என்ற செய்தி எங்கள் காதுகளில் பட்டவுடன், நாங்கள் வானொலியைத் திறக்கிறோம்.

வானொலியில் இன்ப கீதம் பாடப்படுகிறது காரணம், தந்தை பெரியாருடைய சவ அடக்கம் அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று அறிவிக்காத காரணத்தால் வானொலியை இன்ப இசை எழுப்புகிறார்கள்.

அறிவித்தாலும், அறிவிக்காவிட்டாலும் தந்தை பெரியார் எவ்வளவு பெரிய வீரர்! எத்தகைய புரட்சிக்காரர்! எவ்வளவு பெரிய மறுமலர்ச்சியைத் தமிழகத்திலே உருவாக்கியவர் என்பதை எண்ணிப் பார்த்து வானொலியினர் சோக கீதம் எழுப்பி இருக்க வேண்டும்.

அரசு மரியாதை

என்னுடைய இல்லத்திற்கு பெரிய அதிகாரிகள் எல்லாம் வருகிறார்கள். அப்போது நான் ஆட்சிப் பொறுப்பில் தலைவராக இருக்கிறேன்.

வந்த அதிகாரிகளிடத்தில் பெரியாரின் சவ அடக்கத்தை அரசாங்க மரியாதையோடு நடத்தவேண்டும் என்று சொல்கிறேன்.

ஒரு பெரிய அதிகாரி என்னிடம் கேட்கிறார்:

''பெரியார் சட்டசபையில் ஒரு உறுப்பினராகக் கூட இருந்ததில்லையே அவருக்கு எப்படி அரசாங்க மரியாதை செய்யலாம்?'' என்று கேட்கிறார்.

நான் கேட்கிறேன் அவரைத் திருப்பி மகாத்மா காந்தியடிகள் எந்தச் சட்டசபையில் உறுப்பினராக இருந்தார்? அவர் மறைந்த போது அவருக்கு அரசாங்க மரியாதைகள் தரப்படவில்லையா? என்று கேட்கிறேன்.

அரசாங்க அதிகாரி அவரும் தமிழர்தான் தலையைச் சொரிந்து கொண்டு என்னிடம், இல்லை இல்லை ஒரு மாநில அரசு அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்து அரசு மரியாதைகள் பெரியாருக்குச் செய்தால் மத்திய அரசின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்று சொன்னார்.

நான் கேட்கிறேன் ''நேரிட்டால்?''

அவர் சொல்கிறார் 'ஆட்சியைக் கூடக் கவிழ்க்கலாம்'.

அதுவே பெருமை

அப்போது நான் சொன்னேன், ''எங்களுடைய ஆட்சியைக் கலைப்பதற்கு இதுதான் காரணமாகச் சொல்லபடுமானால், இதைவிடப் பெருமை எனக்கு வேறு எதுவுமே கிடையாது. எனவே, துணிந்து அறிவியுங்கள். பெரியாரின் சவ அடக்கம் அரசு மரியாதையோடு நடைபெறும்'' என்று குறிப்பிட்டேன். எனவேதான் சொல்கிறேன் அன்றைக்கே ஏற்படாத அச்சம் ஆட்சி கையிலே இருக்கும்போது ஏற்படாத அச்சம் -அகப்பையிலே உளுந்து இருக்கும்போது அதை ஆட்டலாம் கீழே விழாமல் வீசலாம் என்று எண்ணிய கருணாநிதியா அகப்பையிலே உளுந்து இல்லாத நேரத்தில் அதை ஆட்டப் பயபடுவான்? எனவே, இதற்கு அச்சப்படத் தேவையில்லை.

திராவிடர் கழகத்தின் உணர்வுகள்தான் தி.மு.கழகத்தை இயக்குகின்ற உணர்வுகள்.

உணர்வால் ஒன்றே

திராவிடர் கழகத்தின் நடவடிக்கைகள் செயல் முறைகள் இவைகளிலே எங்களுக்கும் அவர்களுக்கும் வழிகள் வேறு வேறாக இருக்கலாம்.

ஆனால் உணர்வுகள் ஒன்றேதான். அந்த உணர்வுகளைத்தான் நாம் பரிமாறிக் கொள்கிறோம்.

பெரியாருடைய சிலை திறப்பு விழா நேரத்தில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்கு நான் வைக்க விரும்புகிறேன்.

கருணாநிதியும், வீரமணியும் ஏதோ திடீரென்று காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்காரச்சாரியார் அவர்களை எதிர்க்கிறாகள். அவரைப் பற்றி தரக்குறைவாகப் பேசுகிறார்கள் என்றெல்லாம் சிலர் எழுதுகிறார்கள்.

எங்களோடு விட்டால் கூட பரவாயில்லை, பாவம் என்னுடைய பழயை நண்பர் நடமாடும் பல்கலைக் கழகம், நாவலர் அவர்கள் அ.தி.மு.க.விலே பொதுச் செயலாளராகவும் இருந்து, அதற்குப் பிறகு நிதி அமைச்சராகவும் இருப்பவர்.

அவர் ஒரு கூட்டத்திலே பேசும்பொழுது அம்பேத்காரை எவனாவது நினைக்கிறானா? அம்பேத்கர் படத்தை எவனாவது வீட்டிலே மாட்டுகிறானா? ஆனால் சங்கராச்சாரியாருடைய படத்தை வீடுவீடாக மாட்டுகின்ற மட்டிகள் நிறைந்த நாடு இது என்று அவர் பேசி, அதைத் தாக்கிப் பேசுகிறவர்களும், எங்களையும் நாங்கள் சங்காராச்சாரியாரைத் தரக்குறைவாகப் பேசுகிறோம் என்று குறிப்பிடுகிறார்கள்.

விமர்சிப்பது வேறு, தரக்குறைவாகப் பேசுவது என்பது வேறு.

விமர்சிக்கின்ற உரிமை எல்லோருக்கும் உண்டு. எனக்கு சங்கராச்சாரியாரிடம் மதிப்போ, மரியாதையோ என்றைக்கும் குறைந்தது கிடையாது. என்னைப் போலத்தான் வீரமணிக்கும்.

அவருடைய கொள்கைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று யாரும் எங்களை பிடிவாதப்படுத்தி வலியுறுத்த உரிமை படைத்தவர்கள் அல்ல.

பெரியார் - அண்ணா வழிவந்த நாங்கள்

எங்கள் கொள்கைகளை இன்னொருவர் உள்ளத்தில் திணிக்க நாங்கள் விரும்பவில்லை. அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடையவேண்டாம் எவர் சொன்ன சொன்னாலும் அதை உன்றன் பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய் என்பதுதான் தந்தை பெரியாருடைய அறிவுரை!

எந்தவொரு கூட்டத்திலும் பெரியாருடைய துவக்க உரையிலும் சரி, முடிவுரையிலும் சரி, இப்படித்தான் சொல்வார்.

''நான் சொன்னேன் என்பதற்காக நம்பாதே! வீட்டிற்குப் போய் சிந்தித்து முடிவுக்குவா'' என்று.

அதைப் போலத்தான் சங்கராச்சாரியாரின் கொள்கைகளுக்கும், அண்ணாவின் இலட்சியங்களுக்கும், பெரியாருடைய இலட்சியங்களுக்கும் வேறுபாடுகள் இருக்கலாம்.

ஆனால், பெரியார், அண்ணா வழிவந்த நாங்கள் அந்த வேறுபாட்டைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவர்களே தவிர, சங்கராச்சாரியாரையோ, மற்றவர்களையோ மதிப்புக் குறைவாக, மரியாதைக் குறைவாக, தரக்குறைவாக, தகுதிக் குறைவாகப் பேசவேண்டும் என்றோ, எழுத வேண்டும் என்றோ முனைபவர்கள் அல்ல, எண்ணுபவர்களும் அல்ல.

எனக்கு சங்கராச்சாரியாரிடம் நிரம்ப மரியாதை உண்டு.

இன்னும் சொல்லப் போனால் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு கொஞ்சம் நம்பிக்கைகூட ஏற்பட்டது.

'இவனும் எங்கேயோ போய் வலையில் வீழ்ந்து விட்டானே' என்று வீரமணி நினைப்பது எனக்குத் தெரியாமல் இல்லை.

என்ன நம்பிக்கை என்றால் என்னுடைய நண்பர் கண்ணதாசன் அண்மையில் மறைந்துவிட்டார். அருகாமையிலுள்ள சேலம் மாடர்ன் தியேட்டர்சில் தான் நாங்கள் இளமையிலேயே இணைபிரியாத நண்பர்களாகப் பழக தொடங்கினோம்.

கண்ணதாசன் அண்மையிலே அமெரிக்கா சென்றிருந்தார். இடையிலே அவருக்கும் எனக்கும் எவ்வளவோ கருத்து வேறுபாடுகள். ஆனால், நட்பு முறியவில்லை. நட்பு அப்படியே இருந்தது. அவர் பெரியாரையேகூடத் தூஷித்தவர், ஏளனம் செய்தவர்.

இன்னும் சொல்லப்போனால் அவர் அரசவைக் கவிஞர். ஆனால், அரசு நடத்திய பெரியார் விழாவிலே கலந்து கொள்ளவே முடியாது என்று கூறிவிட்டார்.

அவர் அவருடைய கெள்கையிலே பிடிவாதமாக இருந்தார்.

ஆனால், பெரியார் விழா நடத்திய அரசு தன்னுடைய கொள்கையிலே பிடிவாதமாக இருந்ததா? எனக்குத் தெரியாது.

அதை உங்களுடைய முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

அந்த நண்பர் கண்ணதாசன் அமெரிக்காவுக்குச் சென்றார். திடுமென நோய் அவரைப் பற்றிக் கொண்டது. அங்கே அபாயகரமான நிலையில் மருத்துவமனையில் இருப்பதாகச் செய்திகள் வந்தன. டாக்டர்கள் எல்லாம் அவர் பிழைப்பது அரிது என்று கருத்து அறிவித்து விட்டார்கள்.

நான் கலங்கிப்போனேன், சட்டசபையிலே கூடக் கேட்டேன். அவருடைய செலவுகளையெல்லாம் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டேன்.

அரசு ஏற்றுக்கொள்ளும் என்று சட்டசபையிலேயே பதில் சொல்லப்பட்டது.

அந்த நேரத்தில் நானே நம்பினேன்

எதையும் சுலபத்தில் நம்பாத நானே எதையும் சுலபத்தில் நம்பாதே என்று தந்தை பெரியாரால் பயிற்றுவிக்கப்பட்ட நானே அண்ணாவால் பயிற்றுவிக்கப்பட்ட நானே ஒன்றை நம்பினேன்.

காரணம், அப்படி நடந்துவிட்டால் அது நமக்கு இன்பமான செய்தியாயிற்றே என்பதற்காக நம்பினேன்.

நம்புவதால் என்ன கெட்டுவிடப்போகிறது என்று நம்பினேன்.

திருநீறு பலித்ததா?

என்ன செய்தியென்றால், டாக்டர்கள் கைவிட்டாலும் பயப்படத் தேவையில்லை. காஞ்சிபுரத்திலிருந்து சங்கராச்சாரியார் திருநீறு அனுப்பி இருக்கிறார். அது கண்ணதாசன் நெற்றியிலே பூசப்பட்டு விட்டது சங்கராச்சாரியார் சொல்லி இருக்கிறார். ''கண்ணதாசன் உயிரோடு திரும்பி வருவார், திரும்பி வந்து மேலும் இந்து மதத்தைப் பற்றித் தொடர்ந்து எழுதுவார் என்று'' சங்கராச்சாரியாரே ஆசீர்வாதம் செய்திருக்கிறார் என்ற செய்தி வந்தது.

அந்தச் செய்தி வந்ததும் எனக்கு ஏற்பட்ட அளவற்ற மகிழ்ச்சிக்கு ஈடாக, அவருடைய குடும்பத்தாருக்குக் கூட மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது என்று நம்பினேன். சங்கராச்சாரியாரே சொல்லிவிட்டார் அதுவும் காஞ்சிபுரத்திலிருந்து அவர் கையாலேயே விபூதி அனுப்பப்பட்டிருக்கிறது என்பதால் நம்பினேன்.

ஆனால், கண்ணதாசன் முடிவு நம்மையெல்லாம் கண்கலங்க வைத்த முடிவு.

பிறகு தான் எனக்கே நம்பிக்கை குலைந்தது.

சங்கராச்சாரியார் விபூதியைக் கொண்டு போய் உண்மையில் பூசினார்களா? என்று கேட்டேன். பூசியவர்கள் அய்யோ பூசினோமே என்று சொன்னார்கள். பிறகு சங்கராச்சாரியார் உண்மையில் அப்படிச் சொன்னாரா? அவர் சொன்னது உண்மையா? இல்லையா? கண்ணதாசன் திரும்ப வந்து மீண்டும் அர்த்தமுள்ள இந்து மதத்தைப் பற்றி திரும்பவும் எழுதுவார் என்று சங்கராச்சாரியார் சொன்னாரா இல்லையா? என்று கேட்டேன்.

அய்யோ! சொன்னாரே என்று குறிப்பிட்டார்கள்.

நான் உங்களைக் கேட்கிறேன் இதற்குப் பிறகும் என்னை சங்கராச்சாரியாரை நம்பச் சொல்லுகிறீர்களா?

நீங்கள் நம்பக் கூடாது என்பதற்காக நான் ஏதோ ஒன்றை வலியச் சொல்வதாக எண்ணக்கூடாது.

சிந்தித்துப் பாருங்கள் நான் சொல்கிறேன் என்பதற்காக நம்பவேண்டாம். நீங்களே வீட்டிற்குச் சென்று இரவு படுக்கிற நேரத்தில் அல்லது எழும்போது உங்களுடைய தாயோ, தந்தையோ உங்கள் நெற்றியில் திருநீறு பூசுகிற நேரத்தில் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட சங்கராச்சாரியாரின் விபூதியினைப் பற்றி எண்ணிப் பாருங்கள். அதனுடைய பலனையும், அதனால் ஏற்பட்ட வெற்றியையும் எண்ணிப் பாருங்கள்.

ஆகவே, மனித சமுதாயத்தில் மூட, மவுடீக கொள்கைகளுக்கு இடம் தருதல் கூடாது. மனிதன் பகுத்தறிவோடு வாழவேண்டும் என்ற இந்த காரியங்களுக்காகத்தான் பெரியார் வாழ்நாளெல்லாம் பாடுபட்டார்.

நான் உங்களுக்கு, பெரியாரின் சிலையைத் திறந்து வைக்கும் இந்த நேரத்தில் ஒன்றை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எத்தனை இடையூறுகளையெல்லாம் கடந்து இவ்வளவு பெரிய வெற்றியைத் திராவிடர் இயக்கம் பெற்றிருக்கிறது என்று கருதுகிறீர்கள்?

கட்டிக்காக்கும் தளபதி

நாம் போட்ட தார்ச் சாலை, நாம் ஒரு நாள் நான் என்று இறுமாப்போடு சொல்லிக்கொள்ள முடியும். எனக்கு வயது 57 முடிகிறது என்றால், ஏறத்தாழ என்னுடைய 13 வயதிலிருந்து தந்தை பெரியார் அவர்களுடைய மாணவனாக அண்ணாவின் தம்பிகளில் ஒருவனாக இந்த இயக்கத்தின் சாதாரணப் பேச்சாளனாக, எழுத்தாளனாக இருந்த வளர்க்கின்ற பணியைத் தொடங்கி இதுவரை தொடர்ந்து நடத்தி வருபவன்.

அந்தக் காலத்திலேயே என்னைவிட இளையவரான வீரமணி தந்தை பெரியாருடைய கரம் பிடித்து வளர்ந்து பேரறிஞர் அண்ணாவின் அன்பு மழையில் நனைந்த உங்களுடைய நட்பால் இந்த இயக்கத்தினுடைய கொள்கைகளில் அதிக உறுதி படைத்தவராக ஆகி இன்று அந்த இயக்கத்தையே கட்டிக் காக்கின்ற தளபதியாக நம் முன்னால் இருக்கின்றார் என்றால், நாங்கள் அதை பெருமையோடு சொல்லிக் கொள்ளமுடியும்.

ஒரு இயக்கத்தைத் தொடங்கியவர்கள்தான் அதிலே இருக்க வேண்டும் மற்றவர்கள் வரவே கூடாது என்றால், ஒரு வீட்டிலே மாமியார்கள் மாத்திரம்தான் இருப்பார்கள், பிறகு மருமகள்களே வரமாட்டார்கள்.

அந்த எண்ணத்திலே நான் சொல்லவில்லை.

ஆனால் இருக்கிற விவகாரம், வந்த மருமகள் இருக்கிற மாமியாரைத் துரத்தப் பார்க்கிறாளே, அது நியாமா? என்பதுதான்.

மாமியாரும், மருமகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் மருமகளும் மாமியாரை மதிக்க வேண்டும்.

ஒரு இயக்கத்திலே இருந்து வளர்ந்தவர்கள், தாங்கள் வளர்ந்த நேரத்திலே இயக்கத்தையும் சேர்த்து வளர்த்தவர்கள், தங்களுக்குரிய அறிவால், ஆற்றலால் தொண்டு செய்கின்ற இயல்பால் ஒரு இயக்கத்தை வளர்த்தவர்கள் அந்த இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்து, இருப்பவர்கள் அந்த இயக்கத்திற்குப் புதிய இரத்தம் வரவேண்டும் என்று விரும்புகிறவர்கள் அப்படி வருகின்ற புதிய இரத்தங்களை அரவணைத்து இளைய தலைமுறையினருடைய உள்ளங்களிலே இயக்கத்தினுடைய இலட்சியங்களைப் பதியவைக்கின்ற பணியிலே ஈடுபடுவதும், வருகின்ற இளைய தலைமுறையும் பழைய தலைமுறை பட்ட பாட்டினால் அல்லவா இந்தப் பலன் நாட்டிற்குக் கிடைத்திருக் கிறது என்று பழைய தலைமுறைக்கு மதிப்பளித்து காரிய மாற்றவும், இந்த இயக்கம் நடைபோட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆவலாகும்.

இரட்டைக் குழல் துப்பாக்கி

திராவிடர் கழகத்திற்கும், தி.மு.கழகத்திற்கும் உள்ள ஒற்றுமையை தி.மு.கழகம் என்ற இந்த இயக்கம் தொடங்கப் பட்ட 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற தொடக்க விழாப் பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா மிகத் தெளிவாக அறிவித்திருக்கிறார் அதைத்தான் வீரமணி இங்கே குறிப்பிட்டார்.

''திராவிடர் கழகமும், தி.மு.கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி அப்படித்தான் நாங்கள் செயல்படுவோம்'' என்று அண்ணா அறிவித்த தற்கிணங்க, நாங்கள் அப்படித்தான் இன்றளவும் செயல்பட்டு வருகிறோம்.

இன்னொருவரும் சொல்லிக் கொண்டிருக்கிறார். என் அருகிலேயும் ஒரு திராவிடர் கழகம் இருக்கிறது. எனவே, நாங்களும் இரட்டைக் குழல் துப்பாக்கிதான் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இந்தத் துப்பாக்கி சுடக்கூடிய உண்மையான துப்பாக்கி. இது போருக்குப் பயன்படக்கூடிய துப்பாக்கி. எதிரியை வீழ்த்தக்கூடிய துப்பாக்கி. மற்ற துப்பாக்கிகள் எல்லாம் தீபாவளிக்குக் குழந்தைகளிடத்திலே கொடுத்து கேப் சுடுகிற துப்பாக்கிகள்.

அண்ணா குறிப்பிட்டது அந்தத் துப்பாக்கியை அல்ல.

இன்றைக்குத் தார் போட்ட சாலையிலே காரிலே போகிறவர்களே போகிற வேகத்திலே எச்சிலைகூட எங்கள் மீது காரி துப்பிவிட்டுப் போகிறார்களே? அவர்களுக்கு அல்ல எங்கள் மீது துப்பப்பட்ட எச்சிலைத் துடைத்துவிடுகிற தோழனே உனக்குச் சொல்கிறேன்.

இந்தச் சாலையைப் போட்டவர்கள் நாங்கள் இந்தச் சாலை அமையக் கல் சுமந்தவர்கள் நாங்கள் இந்தச் சாலை அமைய கொதிக்கும் வெயிலில் காலிலே சாக்கைக் கட்டிக் கொள்ளாமல், கொதிக்கின்ற வெயிலில் தார் காய்ச்சியவர்கள் நாங்கள்.

தார் காய்ச்சுகின்ற நெருப்பின் சுவாலையில் நெருப்பின் நாக்குகளுக்கு மத்தியில் அந்தச் சூட்டையும் கூடப் பொருட் படுத்தாமல் பணியாற்றிவர்கள் நாங்கள்.

அப்படிப் பணியாற்றிய காரணத்தால், தார் போட்ட சாலை எங்களுக்குத்தான் சொந்தமென்று கொண்டாடுகின்ற பேர் வழிகள் அல்ல நாங்கள்.

ஆனால், தார் போட்ட சாலையிலே, காரிலே போகின்றவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்? எத்தகையவர்கள் அதிலே அமர்ந்து செல்ல வேண்டும்?

அவர்கள் சாலை போட்டவர்களையே, காரி உமிழ்கிறவர் களாக இருந்தால் இரண்டு பேருக்குத் துப்பலாம் மூன்றாவது ஆளிடத்திலே துப்புகிற நேரத்தில், கருணாநிதி பொறுத்துக் கொள்ளலாம், வீரமணி பொறுத்துக் கொள்ளலாம். மூன்றாவது ஆள் மேலே எச்சில் பட்டவுடனேயே திருப்பித் தருகின்ற ஆளாக அவர் இருந்தால் அதற்கு மேல் கார் செல்லாது.

எனவேதான், தார் போட்ட சாலையைப் போடுவதற்கு பெரியார் பட்ட கஷ்ட நஷ்டங்கள் பேரறிஞர் அண்ணா பட்ட

கஷ்ட நஷ்டங்கள், பெரியாருடைய அருமைத் தளபதிகள் என்று சொல்லப்படுகின்ற பட்டுக்கோட்டை கே.வி.அழகிரிசாமி அண்ணன் போன்றவர்கள், பொன்னம்பலனார் போன்றவர்கள், மாயவரம் நடராசன் போன்றவர்கள், நாகை மணி போன்றவர்கள், குடந்தை கே.கே. நீலமேகம் போன்றவர்கள் இவர்களெல்லாம் வழங்கி இருக்கின்ற உழைப்பு, குத்தூசி குருசாமி போன்றவர்கள் எழுதின எழுத்து, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்றவர்கள் புதுச்சேரியில் பட்டபாடு இவைகளுடைய மொத்த விளைவுதான் சுயமரியாதை இயக்கத்தினுடைய வெற்றி.

தந்தை பெரியார் அவர்களுடைய சிலையினைத் திறந்து வைக்கின்ற நேரத்தில் இது பற்றிய எதிர் விமர்சனங்களும் செய்யப்படும் என்பதை நான் அறியாதவன் அல்ல.

இங்கே பேசிய நம்முடைய அருமை நண்பர்கள் சிலர் குறிப்பிட்டதைப்போல நம்முடைய இன எழுச்சியை எதிர்த்து தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் தலைதூக்கி பீடு நடை போடுகிறவர்களே என்று தாங்கவொண்ணாத கொதிப்பின் காரணமாக இதுவரை மவுனமாக இருந்தவர்கள், இன்றைக்கு ஊர்வலம் நடத்துகிறார்கள் என்றும், அந்த ஊர்வலத்திலே ''காணோமே, காணோமே, வீரமணியைக் காணோமே'' என்று ஆரவாரக் கூச்சல்களைக் கேலியாகப் போடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள்.

எங்கே காணமுடியும்?

அவர்கள் நடத்துகின்ற ஊர்வலத்தில் நிச்சயமாக வீரமணியைக் காண முடியாததுதான். வீரத்தைக் காண முடியாத இடத்தில் 'வீரமணி'யை அவர்கள் தேடி அலைகிறார்களே என்பதற்காக நாம் நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

வீரமணியைக் காணவேண்டுமென்றால், அவரை விடுதலை அலுவலகத்தில் காணலாம்.

நாள்தோறும் இந்த நாடு முழுவதும் சுற்றிச் சுற்றி பொது மக்களைச் சந்தித்துப் பேசுகிறாரே அந்த மேடைகளில் காணலாம்.

கருத்து மணக்க வெளிவருகிற 'விடுதலை' தலையங்கத்தில் வீரமணியைக் காணலாம்.

தந்தை பெரியாரின் சிலை எங்கெங்கே காணப்படுகிறதோ அங்கெல்லாம் வீரமணியைக் காணலாம்.

வீரமணி தந்தை பெரியாரின் மாணவர் என்னுடைய இளவல் அண்ணாவின் அன்புத் தம்பி, நீங்கள் எல்லாம் மனமார ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த இயக்கத்தின் படைத்தளபதி.

அதுமாத்திரமல்ல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழன் வீரத்தை நிலைநாட்ட கடாரம் வரையிலே சென்றான். கங்கை கொண்டான் கனகவிசயருக்குத் தோல்வியைக் கொடுத்து விட்டு, அவர்கள் தலையிலே கல்லேற்றி, அவர்களை நடக்க வைத்து கண்ணகிக்குச் சிலையெடுத்தான் என்றெல்லாம் நம்முடைய வரலாறுகளை இலக்கியங்கள் எடுத்து இயம்பிக் கொண்டிருக்கின்றன.

ஏன்? அற்குப் பிறகும்கூட, ராஜராஜசோழன், ராஜேந்திர சோழன் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகிற பிற்காலச் சோழர்கள் காலத்தில் தமிழ் மன்னர்கள் கடல் கடந்து படை நடத்தினர், கப்பற்படை நடத்தினர், வீரக்கொடியை வெற்றிக் கொடியை வெளி நாடுகளில் பறக்க விட்டார்கள்.

'வீரமணி'களும் 'கோழை மணி'களும்

தமிழனுடைய நாவாய்கள், மரக்கலங்கள், கப்பல்கள் தமிழகத்தினுடைய விலையுர்ந்த பொருட்களையெல்லாம் ஏற்றிக்கொண்டு கிரேக்கம், யவனம் போன்ற நாடுகளுக் கெல்லாம் சென்றன. இவ்வாறு வீரத்திலும், விவேகத்திலும் சிறந்து விளங்கிய இந்தத் தமிழகம் இடையிலே ஏற்பட்ட தொய்வின் காரணமாக 'வீரமணி'களை இழந்து 'கோழை மணி'களைக் குவியல் குவியலாகப் பெற்றது.

அதைப் பார்த்துதான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் காணோம், காணோம் வீரமணியை காணோமே என்று அன்று குரல் எழுப்பினார்கள்.

அவர்களுக்கு கிடைத்த வீரமணி தான் இங்கே அமர்ந்திருக்கின்ற நம்முடைய திராவிடர் இயக்கத்தின் பொதுச் செயலாளர் வீரமணி அவர்கள்.

எனவே, ஒரு காலத்தில் வீரமணிகள் குவிந்து கிடந்த தமிழகம் பிறகு கோழை மணிகளால் சிதைந்து இன்று அந்த நிலைமை மாறி நமக்கு வீரமணிகள் நிரம்பக் கிடைத்திருக்கிறார்கள்.

கருத்து மோதலே

பெரியாருக்கும், சங்கராச்சாரியாருக்கும் அல்லது எந்த மதக் குருக்களுக்கும் நேரடி மோதல்கள் கிடையாது.

காஞ்சிபுரத்தில் பிறந்த, வளர்ந்த உலவிய அண்ணா அவர்கள், அந்தக் காஞ்சிபுரத்திலே இருக்கிற காஞ்சி சங்கராச்சாரியார் அவர்களது மடத்திற்கு ஒருநாள் கூடச் சென்றது கிடையாது. அந்த மடத்தின் படிக்கட்டுகளில் அண்ணாவின் பாதங்கள் பட்டது கிடையாது.

ஏன்? என்ன காரணம்? சங்கராச்சாரியாரை அண்ணாவிற்கு தனிப்பட்ட முறையில் பகை காரணமாகப் பிடிக்காதா? அல்ல அல்ல அவர் ஏற்றுக்கொண்ட கொள்கை அதற்கு இடம் தரவில்லை. ஆகவே, அண்ணா அங்கே செல்லவில்லை. அதனால் சங்கராச்சாரியாரை தரக்குறைவாகப் பேசினோம், மட்டமாகப் பேசினோம், தகுதியற்ற முறையில் பேசினோம் என்று கயிறு திரித்து அதன் காரணமாக இலாபமடையலாம் என்று யாராவது கருதினால், அந்த வஞ்சகர்களை அந்தச் சூழ்ச்சிகளை அந்தச் சூதர்களை நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

யார் யாரரோ இன்றைக்கு அறகூவல் விடுக்கிறார்கள். போர் முழக்கம் செய்கிறார்கள்.

எட்டப்பர்கள்

ஆனால், அவர்களுடைய போர் முழக்கத்திற்கு அடிப்படைத் தைரியம் என்ன? வீரமணி கூடச் சொன்னார் அதிலிருந்து நான் மாறுபடுகிறேன்.

'அந்தக் காலத்திலே வேண்டுமானால் வாலியையும், சுக்ரீவனையும்ய மோதவிட்டு மறைந்திருந்த இராமன் வெற்றி பெறலாம்' என்ற வீரமணி சொன்னார்.

'இந்தக் காலம் அப்படியல்ல, வாலியும், சுக்ரீவனும் எப்படி, எப்படி என்று புரிந்துவிட்டது நேரடியாகவே இராமன் வந்துவிட்டான்' என்றும் சொன்னார். அந்தக் கருத்திலிருந்த நான் மாறுபடுவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன்.

இன்றைக்கு வீடணர்கள் தமிழகத்திலிருக்கிறார்கள். இன்றைக்கும் காட்டிக் கொடுக்கிற துரோகிகள் எட்டப்பர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள்.

இன்றைக்கும் கருவுற்று, பத்து மாதம் வாழ்ந்து, வளர்ந்து, பால் குடித்த தாயின் மார்பை அறுத்தெறியக் கூடிய கயவர்கள் கூட்டம் தமிழகத்தில் இருக்கிறது.

தன்மானக் கேடயம்

எனவேதான், அந்தக் கயவர் கூட்டத்தை வேரறுக்க அந்த வீபீஷணக் கூட்டத்தை வேரறுக்க அந்தச் சுக்ரீவன்களின் கூட்டத்தைச் சுக்குநூறாக்க தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை, தன்மான உணர்வு, தமிழினப் பற்று இவைகளை யெல்லாம் கேடயங்களாக வாள்களாக நாம் பயன்படுத்தியாக வேண்டும். அதைப் பயன்படுத்துவோம் என்று பலரறிய நாடறிய உலகறியச் சூளுரைக்கின்ற நாள்தான். பெரியாரின் சிலை திறக்கின்ற நாள் என்று கூறி முடிக்கின்றேன்.

"என் காயங்களை ஆற்றிக் கொள்ள எப்பொழுதும் நான் வருவது தந்தை பெரியாரிடம்தான்"

(அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமைக்கான ஆணை பிறப்பித்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, திராவிடர் கழகத்தின் சார்பில் 12.6.2006 அன்று கலைஞர் திலகர் திடலில் நடத்தப்பட்ட பாராட்டு விழாக் கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு)

விழாவுக்கு தலைமையேற்றிருக்கும் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் வீரமணியார் அவர்களே, முன்னிலை வகிக்கும் அமைச்சர் கோ.சி. மணி அவர்களே, மத்திய அமைச்சர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம் அவர்களே, அமைச்சர் எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்களே, தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களே, கவிப்பேரரசு வைரமுத்து அவர்களே, பெரியார் பன்னாட்டு மையத்தின் இயக்குநர்கள் டாக்டர் சோம. இளங்கோவன் அவர்களே, டாக்டர் இலக்குவன் தமிழ் அவர்களே, வரவேற்புரை ஆற்றிய கு.வடுகநாதன் அவர்களே, இணைப்புரை வழங்கிய கலி.பூங்குன்றன் அவர்களே, நன்றியுரை கூறிய ஆர்.பி.எஸ். சித்தார்த்தன் அவர்களே, என் உயிரினும் மேலான கழக உடன் பிறப்புளே, அனைவருக்கும் வணக்கம்.

இன்று தஞ்சைத் திருநகரில் நடைபெறுகின்ற இந்த விழா என் நெஞ்சை அள்ளுகின்ற விழா. நஞ்சைக் கலத்திருந்தார்கள், நம்முடைய தனித் தமிழ்ப் பண்பட்டில். அந்தக் கொடுமையை அகற்றி தந்தை பெரியார் இட்ட கட்டளையை தாமதமாக நிறைவேற்றினாலும் அறைகூவல் விட்டு நிறைவேற்றிக் காட்டினோம் என்ற அந்த மகிழ்ச்சியோடு நானும், நம்முடைய வீரமணியார் அவர்களும், திராவிட இயக்க முன்னோடிகளும் இங்கே கூடியிருக்கின்றோம்.

திராவிடர் இயக்கத்தினுடைய விழா என்றால், அது ஒரு இயக்கத்தினுடைய விழா என்று நான் நினைப்பதில்லை.

நம்முடைய குடும்பத்தின் நிகழ்ச்சி என்ற அந்த உணர்வுதான் என்றைக்கும் என்னை உந்தித் தள்ளும். அந்த உணர்வில் ஒரு துளியும் மாறாமல் இன்று நான் இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்றேன்.

தந்தை பெரியாருடைய ஆணையை ஏற்று
தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்தோம்

நம்முடைய வீரமணியார் அவர்கள் ஆற்றிய உரையில் ஆங்காங்கே வெளிப்பட்ட உணர்ச்சிமிகு சொற்கள், பாசமிகு சொற்கள், அன்பு கலந்த சொற்கள் இவையெல்லாம் இன்று நேற்றல்ல, நானும் அவரும் இளமைக் காலத்திலே மிகமிக இளமைக் காலத்திலே சிறுவர்களாக இருந்த அந்தக் காலத்திலே தந்தை பெரியாருடைய ஆணையை ஏற்று தமிழகமெங்கும் மாவட்டந்தோறும் சுற்றுப் பயணம் செய்தவர்கள். எங்களுடைய காலடி படாத கிராமங்களே இல்லை. பட்டிதொட்டிகளே இல்லை. நகரங்களே இல்லை. நாட்டுபுறச் சீமைகளே இல்லை. அப்படி பெரியாருடைய சுயமரியாதைக் கொள்கைகளை, பகுத்தறிவு இலட்சியங்களை பரப்புவதற்காக காடு மேடெல்லாம் சுற்றியலைந்து, கழனிகளைச்கூட கடந்து சென்று சேறும், சகதியும் நிரம்பிய இடங்களிலெல்லாம் கூட கூட்டங்கள் நடத்தி, எதிர்ப்புகள் மலையென வந்தாலும், அவற்றைப் பொருட் படுத்தாது சிரித்த முகத்தோடு அவற்றைச் சமாளித்து இந்த இயக்கத்தை சிறு பிராயத்திலே வளர்க்கின்ற அந்தப் பணியில் ஒன்றாக இருந்தவர்கள் என்று சொல்வதற்காக மன்னித்துக் கொள்ள வேண்டும், இன்றைக்கும் இருப்பவர்கள்.

அதனால்தான் என்னை இங்கே பாராட்டுவதாக அவர்கள் கூறி அவர் தலைமையேற்றிருக்கின்ற திராவிடர் கழகத்தின் சார்பாக பாராட்டு என்று கூறி, இந்த விழாவிற்கு அமெரிக்காவில் இருந்துகூட நண்பர்களெல்லாம் வருகை தந்து ஆன்றோரும், சான்றோரும் கவிஞர் பெருமக்களும் கழகத்தின் நண்பர்களும்

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பெரியவர்களும் திரண்டிருக்கின்ற இந்தப் புகழ்பெற்ற மைதானத்தில் மேலும் எனக்கு புகழ் சேர்க்கின்ற வகையிலே பல கருத்துக்களை வாரி இறைத்திருக் கின்றார்கள்.

நான் இதற்கு உரியவன்தானா? இதை ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவுக்கு எனக்குத் தகுதி உண்டா? என்பதெல்லாம் வேறு விஷயம். ஆனால் தகுதி உண்டு, உரியவன். எப்படியென்றால், இவையெல்லாம் தந்தை பெரியார் அவர்களைச் சேரக் கூடியவை. பெரியார் அவர்களுக்கே உரியவை என்பது ஒத்துக்கொள்ளப் படுயோனால், இங்கு எனக்கும் உரியவை என்று கூறுவதிலே எந்தவித அய்யப்பாடும் எனக்கில்லை.

நம்முடைய தவத்திரு அடிகளார் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஒருமுறை பெரியார் திடலில் சென்னை மாநகரத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. அங்கே நான் பேசியதை இங்கே அடிகளார் குறிப்பிட்டார்கள். அந்த விழாவிலே தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெரியவர் இவருடைய (பொன்னம்பல அடிகளார்) ஆசான் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்கள். நானும் முதலமைச்சர் என்ற முறையிலே அந்த விழாவிலே கலந்து கொண்டேன். அந்த நிகழ்ச்சியிலே தான் தந்தை பெரியார் அவர்கள் எனக்கு சென்னை மாநகரத்திலே முக்கியமான ஓர் இடத்தில் சிலை வைக்க வேண்டும் என்று அறிவித்து, நான் வேண்டாம், வேண்டாம் என்று மேடையிலேயே தடுத்தும்கூட கேளாமல் அந்தச் சிலையைத் திறப்பதற்கான நன்கொடையைக் கூட கேட்காமல் அவர்களே அறிவித்து அடிகளார் அவர்களும் தான் வழங்கக்கூடிய நன்கொடை எவ்வளவு என்கிற தொகையை அவரும் குறிப்பிட்டு நடைபெற்ற அந்த விழா நிகழ்ச்சியில் நான் பேசும்போது சொன்னேன், "நான் என்னதான் முதலமைச்சராக இருந்தாலும், தந்தை பெரியாருடைய கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக நான் முனைகிற நேரத்தில் எதிர்ப்படு கின்ற பகையை என்மீது பாய்ந்து பிராண்டுகின்ற எதிர்ப்புகளை,

அதனால் ஏற்டுகின்ற காயங்களை, கீறல்கள் ஆற்றிக்கொள்ள நான் வரக்கூடிய ஓர் இடம் இந்த பெரியார் திடல்தான். எப்படி இறுதியில் கீரிதான் வெல்லும் என்றாலுங்கூட, பாம்பின் விஷப்பற்களால் கீரியின் உடலில் பட இடங்களில் ரண காயங்கள் ஏற்பட்டிருக்கும். சண்டை ஓய்ந்து வென்றுவிட்ட கீரிப்பிள்ளை தன்னுடைய உடலிலே இருக்கின்ற காயங்களுக்கு மருந்து தேடி யாரும் அறியாத ஓர் இடத்திற்கு ஓடி வரும். அதற்கு மாத்திரமே தெரிந்த ஒரு மூலிகை. அந்த மூலிகையிலே விழுந்து புரளும். புரண்ட பிறகு அந்த விஷத்தன்மை அற்றுப் போய்விடும். கீரி பிழைத்து ஓடும்.

பெரியார்தான் எனது காயங்களுக்கெல்லாம் மருந்தாக விளங்குகின்றார்.

அதைப்போலத்தான் ஆரிய நச்சரவங்களால் என்னுடைய உடலெல்லாம் ஏற்பட்டிருக்கின்ற அந்தக் காயங்கள் பெரியார் என்னும் இந்த மூலிகையின் மடியிலே வந்து விழுந்து புரண்டால் அந்தக் காயங்களெல்லாம் விஷத்தன்மையற்று ஆறிவிடும். எனவே, எனக்குப் பெரியார்தான் இந்தக் காயங்களுக்கெல்லாம் மருந்தாக விளங்குகிறார். அதனால்தான் பெரியார் திடலை நோக்கி அடிக்கடி வருகிறேன்'' என்று சொன்னேன்.

பெரியார் ஓர் ஆலமரம். அந்த ஆலமரத்தினுடைய விழுதுகளும், கிளைகளும் அந்தக் கிளைகளிலே இருக்கும் தழைகளும் மூலிகையாக இருந்து எனக்குப் பயன்பட்டன. அந்த ஆலமரத்தின் நிழலிலே இன்றைக்கு நான் காணுகின்ற ஓர் ஆலமரக் கன்றுதான் நம்முடைய வீரமணியார். ஆலமரம் இல்லாவிட்டாலும் அடுத்து வளருகின்ற கன்றாக இந்த மூலிகைக் கன்று இருக்கின்ற காரணத்தினால்தான் அந்தக் காயங்கள் இன்றைக்கு இல்லாம லில்லை, இன்றைக்கும் காயங்கள் தொடர்கதைதான் எனக்கு; அந்தத் தொடர்கதையாக என்னுடைய உடலில் ஏற்படுகின்ற அந்தக் காயங்களையெல்லாம் ஆற்றிக் கொள்ள நான் இப்போதும் வருகின்ற இடம் திராவிடர் கழகத்தினுடைய கூடாரம்தான்

என்பதை என்னுடைய ஆருயிர் இளவல் வீரமணி அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

இதை நான் சொல்வதனால், வீரமணியினுடைய தயவுக்காக நான் வருகின்றேன் என்று அவரும் அல்லது கருணாநிதியினுடைய தயவுக்காக நாம் அவரை அரவணைக்கிறோம் என்று யாரும் கருதாதீர்கள். இது இன ஒன்றுமைக்கான ஒரு இயக்கம். இது லட்சிய ஒற்றுமைக்கான ஓர் இயக்கம். அதனால்தான் அன்றைக்கு அண்ணா அவர்கள் தீர்க்கதரிசனமாகச் சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிடர் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று சொன்னார்கள். அழகுக்காகச் சொல்லவில்லை, அடுக்குச் சொல்லுக்காகச் சொல்லவில்லை. உண்மையைச் சொன்னார்கள்.

நாங்கள் இன்றைக்கும் இரட்டைக் குழல் துப்பாக்கிதான். இந்த இரட்டைக் குழல் துப்பாக்கி சில நேரங்களில் வெடிக்காமல் இருந்திருக்லாம். ஆனால், வெடிக்க வேண்டிய நேரத்தில் யாரை குறி பார்க்கவேண்டுமோ, எந்தக் தன்மையைக் குறி பார்க்க வேண்டுமா, எதை அடியோடு வீழ்த்தினால்தான் இந்த நாடு உருப்படும் என்கின்ற நிலை ஏற்படுகிறதோ, அந்த நேரத்தில், சேர்ந்தே வெடிப்போம், சோர்ந்தே போகமாட்டோம் என்பதற்கு அடையாளம்தான் இன்றைக்கு தஞ்சைத் தரணியிலே இந்த மேடையிலே நானும், அவரும் ஒன்றாக அமர்ந்திருப்பதும், அவர் என்னைப் பாராட்டுவதும், நான் அவரைப் பாராட்டுவதும். பெரியார் அவர்கள் சொல்வார்கள். அவருடைய சிலை வைப்பதைப் பற்றிச் சொல்வார்கள். என்னுடைய சிலையை ஏன் வைக்கவேண்டும் என்று சொல்கிறேன் என்றால், தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல, இந்தியாவிலே மூலை முடுக்கெல்லாம், என்னுடைய சிலையை நிறுவ வேண்டும் என்று பெரியார் சொல்லிவிட்டு, இது என்ன சுய விளம்பரமா என்று யாராவது கேட்டால், அவருடைய பாஷையிலே சொன்னால், எவனாவது கேட்டால், என்று கேட்டுவிட்டு பெரியார் சொல்வார், ''ஆம்,

எங்கெங்கே இந்த உருவச்சிலை இருக்கிறதோ, அங்கெல்லாம் அந்தச் சிலையை பார்க்கிறவன் யாருடைய சிலை என்று கேட்பான். இது ஈ.வெ.இராமசாமி பெரியார் என்று சொல்கிறோம். அப்படி என்றால் இது யார் என்று கேட்பான். அதற்குக் கிடைக்கின்ற பதில், என்னுடைய கொள்கைகள் சொல்லப்படும். என்னுடைய லட்சியங்கள் சொல்லப்படும். ஆகவே, என்னுடைய கொள்ளைகள் பரவ, லட்சியங்கள் பரவ, எல்லோருக்கும் என்னுடைய லட்சியங்கள் புரிய வைக்கப்பட, என்னுடைய சிலை ஆங்காங்கே இருக்கவேண்டும்'' என்று பெரியார் சொல்வாரே, அதே பாணியிலே சொல்கின்றேன். நான் அவரைப் பாராட்டுகிறேன் என்றால், அவர் என்னைப் பாராட்டுவார் என்றால், அவருடைய கொள்கைகளை நான் பாராட்டுகின்றேன். என்னுடைய கொள்கைகளை, என்னுடைய சாதனைகளை அவர் பாராட்டுகிறார். இரண்டும் சேர்ந்து, இந்தச் சமுதாயத்தை வாழ வைக்கக் கூடிய பாராட்டுக்கள் என்பதால் தான். எங்களை உயர்த்திக் கொள்வதற்காக அல்ல, எங்களை வாழ வைப்பதற்காக அல்ல. நம்மை வாழ வைப்பதற்காக, நம்முடைய நாட்டை வாழ வைப்பதற்காக, நம்முடைய இனத்தை வாழ வைப்பதற்காக, நாங்கள் ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்கிறோம். இது சுயநலம் என்று சொன்னால், இதுதான் சுயநலம் என்றால், இந்த சுயநலம் பரவட்டும் என்று நான் இங்கே அறைகூவல் விடுக்கின்றேன். இந்தச் சுயநலத்திலே நான் காண விரும்புவது நம்முடைய இன ஒற்றுமை, நம்முடைய இன எழுச்சி.

பரம்பரை யுத்தம் முடிவடைய எனக்கு வீரமணியாரும், அவருக்கு நானும் துணையிருக்க வேண்டும்.

சொன்னார்களே, அரசியலுக்கு நான் தாவ விரும்பவில்லை. இருந்தாலும் சொன்னார்களே,

பரம்பரை யுத்தம் என்று. அந்தப் பரம்பரை யுத்தம் தானே இப்பொழுது முடிந்திருக்கின்றது. இன்னும் முடிவடையாமல்

கூட இருக்கிறது. முடிவடைய வேண்டுமானால் எனக்கு வீரமணியாரும், வீரமணிக்கு நானும் துணையிருக்க வேண்டும் அல்லவா! அப்பொழுதுதானே பரம்பரை யுத்தத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

பரம்பரை யுத்தம் எப்படி இன்றைக்கு ஆலயத்திற்குள்ளே அர்ச்சனை செய்ய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் செல்லலாம், அனைத்துச் சாதியினரும் செல்லலாம் என்பது அரசாங்கத்தினுடைய ஆணை. இந்த ஆணையை வெளியிட 34 ஆண்டுகாலம் ஆகிவிட்டது என்று ஆதங்கத்தோடு வீரமணி அவர்கள் இங்கு சொன்னார்கள். சொல்லிவிட்டு 34 கிலோ எடையுள்ள ஒரு நினைவுச் சின்னத்தை என்னிடத்திலே தந்தார்கள். அது வெள்ளியால் செய்ததோ, தங்கத்தால் செய்ததோ, பித்தளையால் செய்ததோ எனக்குத் தெரியாது. 34 கிலோ வெள்ளியால் செய்திருந்தால் எண்ணிக் கொள்வேன், தங்கத்தால் செய்திருந்தால் கூட என்ன எண்ணிக் கொள்வேன், இன்னும் ஒரு பத்தாண்டுக் காலம்கூட தாமதமாகக் கூட ஆகியிருக்கலாமே என்று கூட எண்ணிக்கொள்வேன். 34 ஆண்டுகள், 34 கிலோ அதிலே ஓர் ஆலயம். அந்த ஆலயத்தினுடைய கருவறை. அதிலே ஒரு தமிழன், நம்முடைய வைரமுத்துவைப்போல. அந்த நிறத்தோடு உள்ளே சென்று பூஜை செய்கிறான். வெளியிலே அய்யர், அய்யங்கார் கையேந்தி நிற்கிறார்கள். இது அந்தச் சின்னம். எனக்கு அளிக்கப்பட்ட விருதுச்சின்னம். எல்லோரும் பார்த்திருக்க முடியாது என்பதற்காக விளக்கிச் சொன்னேன். அவ்வளவுதான்.

எத்தனையோ நூற்றாண்டு காலமாக ஏற்பட்டிருந்த அவமானச் சின்னம் துடைக்கப்பட்டிருக்கிறது.

அந்தச் சின்னத்தை 34 ஆண்டுகாலமாக வரைய முடியாத நிலையில் நாம் இருந்தோமோ இல்லையா? எத்தனை குறுக்கீடுகள், இன்று நேற்றல்ல; எத்தனையோ நூற்றாண்டு காலமாக ஏற்பட்டிருந்த அவமானச் சின்னம். அது இன்றைக்கு

துடைக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல, இந்தியா முழுமையும் இது இருந்தது. இந்த ஆண்டு பிறந்த நாளில் ஒரு புத்தகத்தை எனக்கு அன்பளிப்பாகத் தந்தார்கள். 'இவர்தான் நாராயண குரு' என்பது அந்தப் புத்தகத்தினுடைய தலைப்பு. வாழ்த்த வயதில்லை வணங்குகிறேன் என்ற குறிப்போடு பணிவுள்ள அகதி என்று கையொப்பமிட்டு, ஜூன் 3ஆம் தேதி அன்று இந்தப் புத்தகத்தை எனக்கு வழங்கினார்கள். படித்துப் பார்த்தால் வழக்கம்போல, அது இந்தப் பாசறையிலே இருந்து வெளிவந்ததுதான். நம்முடைய ஆருயிர் இளவல் வீரமணி அவர்களுடைய அங்கீகாரத்தோடு, அவருடைய வாழ்த்தோடு, அவர்களுடைய ஊக்க முயற்சியோடு வெளியிடப்பட்ட ஒரு நூல்.

இடமருகு என்கிற எழுத்தாளரால் வரையப்பட்ட அருமையான நூல். நூலுக்குத் தலைப்பு, 'இவர்தான் நாராயண குரு'. நாராயண குரு என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் கேரளத்தில் பெரியாருக்குச் சமமாக என்று சொல்லமாட்டேன். பெரியார் அளவுக்கு என்று நான் கூற மாட்டேன். ஏனென்றால், பெரியார் எனக்குத் தலைவர் என்ற காரணத்தால் அல்ல. பெரியார் செய்த புரட்சி, உலகத்திலே எங்கும் யாரும் இதுவரையிலே செய்யவில்லை என்ற காரணத்தால், யாரையும் நான் பெரியாருக்கு ஒப்பிட்டுக் கூற மாட்டேன். பெரியார் காலத்திலே, பெரியார் வைக்கம் போராட்டத்திலே இருந்த அந்தக் காலக்கட்டத்திலே வாழ்ந்தவர் நாராயண குரு. ஒரு சாதாரண ஈழவர் குடும்பத்திலே பிறந்தவர். அவரைப்பற்றி அந்தப் புத்தகத்திலே உள்ள குறிப்பில்,

''தீண்டாமைக் கொடுமை தலைவிரித்தாடிய காலக் கட்டத்தில், கேரளத்திலே பிறந்து தீண்டாமைக்கு எதிராக, அமைதியான, உறுதியான வழியிலே போராடியவர் நாராயண குரு. வைக்கம், சத்தியாக்கிரக போராட்டக் காலத்தில், சத்தியாக்கிரகத்திலே ஈடுபட்ட மக்களுக்கு அவர் செய்த உதவிகள் காலத்தால் மறக்க முடியாது. அந்த மகானின் வாழ்க்கை

வரலாற்றை அறிய தமிழில் அவ்வளவாக நூல்கள் இல்லை. அந்தக் குறையைப் போக்க, இந்தியப் பகுத்தறிவாளர்கள் சங்கத் தலைவர் ஜோசப் இடமருகு அவர்கள், மலையாள மொழியிலே எழுதிய நூலை செல்வி அமலா அவர்கள், தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கின்றார்''.

என்று முதலிலே குறிப்பு அதனுடைய பதிப்புரையிலே, அணிந்துரையில நம்முடைய ஆருயிர் இளவல் வீரமணியார் அவர்களுடைய பெயர் குறிப்பிடப்பட்டு, அவர்களுடைய அயராத முயற்சியாலும் அவர் வழங்கிய ஊக்கத்தாலும், இந்த நூல் வெளியிடப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே நாம் மிக முக்கியமாகக் காண வேண்டியது. நாராயண குரு வாழ்ந்த காலம், கேரளம் எப்படி இருந்தது என்பதை விளக்குவதற்காகத்தான். அதற்கு முன்பே, தமிழகம் எப்படி இருந்தது? தென்னகம் எப்படி இருந்தது? என்பதை நம்முடைய தளபதி வீரமணி அவர்கள் உரையாற்றியபோது சொல்லிக் காட்டினார். சம்புகன் என்ற ஒரு சூத்திரன் தவம் செய்தான் என்ற காரணத்திற்காக, அவனுடைய தலையையே கொய்தான் இராமன் என்ற இராமாயணக் கதையை இங்கே அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இங்கேயாவது தலையைக் கொய்தார்கள். ஒரு தாழ்ந்த சாதி மனிதன் ஒருவன், தவம் செய்வது தீது, அது ஆகாது, சாஸ்திரம் ஒதும், வேதங்களுக்கு, சம்பிரதாயங்களுக்கு, சாதிக் கட்டுப்பாடுகளுக்கு ஆகாத ஒன்று. கடவுளுக்கே ஆகாத ஒன்று என்று கூறி, அவனுடைய தலையை அறுத்து எறிந்தார்.

தமிழகத்தில் மட்டுமல்ல கேரளத்திலும் கொடுமைகள் நடைபெற்றன.

ஆனால், கேரளத்தில் இதைவிடச் சங்கடமான காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதில் உள்ள வாசகத்தைப் படித்துக் காட்ட விரும்புகின்றேன், ''வரிகள்'' போடுகின்ற விஷயத்திலே கூட சட்டம் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு அனுகூலமாக வில்லை. பார்ப்பனர்கள் எவ்வித வரியும் செலுத்த வேண்டிய

அவசியமில்லை என்பது மட்டுமல்லாமல், அவர்களுக்கு இலவச உணவும், திருப்படி தானங்களும் கிடைத்தன. சேவைசெய்த சமுதாயம் என்ற நிலையில், நாயர்களுக்கும் வரி மிகவும் குறைவாகத்தான் இருந்தது. 'நாயர் என்றால், இங்கே நாம் சூத்திரர் என்று அழைக்கிறோமோ, அவர்கள் கேரளத்திலே நாயர்கள்'; உயர்ஜாதிக்காரர்கள் மேனன்கள். அந்த நாயர்களுக்கு, இராணுவத்திலே சேவை செய்தார்கள் என்ற காரணத்திற்காக வரி மிகவும் குறைவாக கூட இருந்தது. ஆனால், ஈழவர், நாடார் ஆகியோர் நிலை மாறுபட்டதாகக் காணப்பட்டது. மன்னிக்க வேண்டும் இந்த வரியைப் படிப்பதற்காக; ஈழவப்பெண்கள் முலை வரியும், தலைவரியும் கொடுக்க வேண்டும் என்பது சட்டம். வரி வசூலிக்கக் கூடிய அதிகாரிகளுடைய தொல்லை பொறுக்க முடியாத நிலை ஏற்பட்டதும், சேர்த்தலை என்ற ஊரைச் சேர்ந்த ஒரு ஈழவப் பெண், அவருடைய இரு முலைகளையும் அறுத்து, வாழை இடையிலே வைத்து வரி வசூலிக்கின்ற அதிகாரியிடம் கொடுத்தார். அவர் வாழ்ந்த இடம் இன்னும் ''முலைச்சிப் பறம்பு'' என்று அழைக்கப்படுகிறது. கொடுமையினுடைய சின்னம் இன்றைக்கும் பெயர் சொல்லி அழைக்கப்படுகிறது கேரளத்தில்.

இதை என்.ஆர்.கிருஷ்ணன் என்பவர் எழுதிய ''ஈழவர் அன்றும் இன்றும்'' என்ற புத்தகத்தில் 1960ஆம் ஆண்டு வெளிவந்த நூலில், 89ம் பக்கத்தில் காணப்படுகின்ற அந்த வாக்கியத்தைதான் உங்களிடத்திலே நான் படித்துக் காட்டினேன்.

இத்தகையக் கொடுமைகள் தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல, கேரளத்திலும் இருந்திருக்கிறது. இந்தியாவிலே பல பகுதிகளிலும் இருந்திருக்கின்றது. இன்றைக்குக் கூட கலப்புத் திருமணம் செய்து கொண்டார் என்பதற்காக ஒரு பெண்ணை நிர்வாணமாக நடு வீதியிலே, நடமாட விட்டு, ஊர்வலம் விட்டு, சித்திரவதை செய்தார்கள் என்ற செய்தியை, ஒரு நான்கைந்து மாதங்களுக்கு முன்பு கூட, வட நாட்டிலே ஒரு மாநிலத்தில்,

நடைபெற்றதாக செய்தி வந்திருக்கிறது. ஆக, தலித்துகள் என்றால், தலித்துக்களைப் போல கருதப்படுகின்ற ஈழவர்கள் என்றால், உயர் சாதிக்காரர்களால் என்றைக்கும் ஒதுக்கப் படுகிறவர்கள் என்றால், அவர்களுக்கு ஒரு நீதி, உயர்ஜாதிக்காரர் களுக்கு ஒரு நீதி என்பது குறிப்பிட்ட இடத்திலே மாத்திரம் அல்ல, தமிழகம் தாண்டியும் இருந்திருக்கிறது, இன்னமும் இருக்கிறது. இதற்கெல்லாம் தேவைப்படுகின்ற கருவிதான், இதையெல்லாம் சுட்டுப் பொசுக்குகின்ற கருவிதான் தந்தை பெரியாருடைய சுயமரியாதைக் கருவி, தன்மானக் கருவி, பகுத்தறிவுக் கருவி என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

தந்தை பெரியாரின் இறுதிப் பேருரை

தந்தை பெரியார் அவர்கள், எவ்வளவு வேதனைப்பட்டார் என்பதை அவருடைய இறுதிப் பேருரை தியாகராயர் நகரில் அவர் மறைவதற்குச் சிற நாள்களுக்கு முன்பு ஆற்றினாரே அந்தப் புத்தகத்தை வாங்கிப் படித்தாலே புரிந்து கொள்ளலாம். தான் உயிர் விடுவதற்கு முன்பு இந்த ஜாதிக் கொடுமையை உயர்வு, தாழ்வு என்கின்ற இந்தக் கொடுமையை விட்டு செல்கிறோமே என்று படாதபாடு பட்டார். இதை ஒழித்தே தீரவேண்டும், நான் இருப்பதற்குள்ளாகச் செய்ய வேண்டாமா? என்று போர் முரசு அறைந்து பார்த்தார். அப்பொழுது நான் ஆட்சிப்பொறுப்பிலே இருந்தேன். அவருடைய இல்லத்திற்குச் சென்றேன், வழக்கம்போல் என்னிடத்திலும், தான் போர் முரசு கொட்டப் போகிறேன் என்று முழங்கினார். 'அய்யா வேண்டாம் நானே பார்த்துக்கொள்கிறேன்' என்று சொன்னேன். இனி நான் யாரையும் நம்பத் தயாராக இல்லை. இறுதிப் போர் நடத்தியே தீருவேன்' என்று குறிப்பிட்டார். ஆனால் இங்கே தழுதழுத்த குரலில் அந்த நிகழ்ச்சியை தலைவர் வீரமணி எடுத்துக் காட்டியதைப்போல் அய்யா மறைந்தார். மறைந்தபொழுது என்னதான் அரசு மரியாதையோடு அவரது உடலை நாங்கள்

அன்றைக்கு அடக்கம் செய்தோம் என்றாலும், அந்த முள்ளை எடுக்காமல் விட்டுவிட்டோமே என்ற கவலை எங்களைக் கேட்டுக்கொண்டே இருந்தது. சில பேர் சொன்னார்கள், சட்டப்பேரவையிலேகூட பேசினார்கள். வேதனை என்ன வென்றால், என்ன எதிர்க்கட்சி என்று நான் சொல்ல விரும்ப வில்லை. தலித் இனத்தைச் சேர்ந்தவர்களே பேசினார்கள். படித்தவர்கள் பேசினார்கள். நான் இவர்கள் சுயமரியாதைக் காரர்கள் என்று யாரை எண்ணிக் கொண்டிருந் தேனே, அவர்களேகூடப் பேசினார்கள். என்னைப் பார்த்துக் கேட்டார்கள். ''ஏதோ ஆதிதிராவிடர்களை அர்ச்சகர்களாக ஆக்கப் போவதாக சொன்னீர்களே, இதிலே என்ன பெரிய பெருமை இருக்கிறது. ஒரு அய்.ஏ.எஸ்., ஆக்கப்போகிறேன் என்றால் நியாயம், கலெக்டர் ஆக ஆக்கப் போகிறேன் என்றால் நியாயம், ஒரு அர்ச்சராக ஆக்கப் போவதா பெரிய காரியம்'' என்றார்கள். நான் எழுந்து சொன்னேன். அய்.ஏ.எஸ். ஆக ஆக்கிவிடலாம், கவர்னராகக் கூட ஆக்கிவிடலாம். ஏன் இந்தியாவின் பிரதமராகக் கூட ஆக்கிவிடலாம். ஆனால் அர்ச்சகராக ஆக்க முடியாதுப்பா என்று சொன்னேன். முடியுமா? இதுவரையில் இருந்ததே; நிலை அப்படி; முடியாது! எனவே நாராயண குரு புத்தகத்தில் இன்னொரு சம்பவத்தை இங்கே குறிப்பிடுகிறார்கள். சுவையான சம்பவம் உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். கேரளாவில் ஒரு கோயிலில் திருவனந்த புரத்தில், நிர்வாகிகளுக்குள்ளே தகராறு. அந்தத் தகராறைத் தீர்த்துக் கொள்ள அப்பொழுது அந்த ஊருக்கு வந்திருக்கின்ற நாராயண குருவிடத்தில் இரண்டு குழுவினரும் செல்கிறார்கள். என்ன தகராறு என்பதை விளக்குகிறார்கள். நாராயண குரு அதுபற்றி விசாரிக்கிறார். மாலை நேரம் நெருங்கி விடுகிறது. கோயில் தீபராதனைக்குரிய நேரம் ஆகிவிடுகிறது.

வழக்கில் சம்பந்தப்பட்ட இருவரும் இரண்டு பிரிவாக அணி திரண்டு நிற்கிறார்கள். அப்பொழுது கோயிலுக்கு சற்று

தொலைவில் ஒரு கூட்டத்தினர் குளித்துவிட்டு விபூதியைப் பூசிக்கொண்டு வந்தார்கள். அவர்களைப் பார்த்துவிட்டு நாராயண குரு; அவர்கள் யார்? அவர்கள் எதற்காக தொலைவில் நிற்கிறார்கள்? அவர்களும் அருகில் வரலாமே என்கிறார்கள். உடனே ஒரு பிரமுகர் சொல்கிறார், 'அவர்களும் புலையர்கள் சுவாமி, புலையர்கள்' அவர்கள் கோயிலுக்குள் நுழைய அனுமதி இல்லை. அதனால்தான் தொலைவில் நிற்கிறார்கள். உடனே நாராயண குரு, ஓ அப்படியா? அவர்களைக் கோயிலுக்குள் விட வேண்டும். அவர்களும் மனிதர்கள் அல்லவா? அவர்களிடமும் சுத்தம் உள்ளது. குளித்து நல்ல ஆடைகள் அணிந்திருக்கிறார்கள் அல்லவா? பார்க்க நன்றாக இருக்கின்றார்கள். நன்றாக உழைப்பவர்களும்கூட. நாம் நன்றாக ஆக்கினால் இன்னும் நன்றாக ஆவார்கள்' என்றார்.'

உடனே இன்னொரு பிரமுகர் சொல்கிறார், ''அய்யோ அது இயலாது, புலையரை எங்களுடைய கோயிலில் ஏற்றுவதில்லை. எங்களுக்கு வேதனை தரும் விஷயம் அது. எங்களுக்கு அப்படி கட்டளை இடக்கூடாது.' உடனே நாராயண குரு சொல்கிறார். 'எங்களுக்கு என்றுசொன்னால், யார் அந்த எங்கள்?' உடனே ஒரு பிரமுகர், 'எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள்' என்கிறார். உடனே நாராயண குரு சொல்கிறார், 'ஓகோ, அப்படியா? விருப்பமில்லை யென்றால் நானும் வற்புறுத்தவில்லை.' உடனே இன்னொரு பிரமுகர், 'நாங்களும் சம்மதிக்க மாட்டோம். புலையரை கோயிலுள் அனுமதிக்க முடியாது' என்கிறார். உடனே நாராயண குரு புன்னகைத்துச் சொல்கிறார், 'உங்கள் தகராறு தீர்ந்தது. இருவரும் ஒன்றாகி விட்டீர்கள்' என்கிறார். எப்படி என்று கேட்கிறீர்களா? இருவருக்குள்ளேயும் நிர்வாகத் தகராறு. வந்த இடத்திலே அவர்களை நுழைய விடக்கூடாது என்பதிலே இரண்டு பேருமே ஒன்றாக இருக்கிறீர்கள்.

புலையரை, தீண்டத்தகாதவனை, தாழ்த்தப்பட்டவனை, தலித் குடிமகனை கோயிலுக்குள் விடக்கூடாது என்று தகராறு

செய்வதில் இரண்டு பேரும் ஒன்றாக இருக்கிறார்கள். அவனும் சொல்கிறான், உள்ளே விடக்கூடாது என்று. தகராறு செய்த இன்னொருவனும் கூறுகிறான், உள்ளே விடக்கூடாது என்று. உடனே நாராயண குரு சொல்கிறார். அப்படியானால் எனக்கு வேலை முடிந்து விட்டது. நீங்கள் இருவரும் இந்த விஷயத்திலே யாவது ஒன்றாக ஆனீர்களே. பரவாயில்லை என்று கூறிவிட்டு வெளியே வருகிறார். என்னதான் தகராறு இருந்தாலும், என்னதான் சண்டை சச்சரவு இருந்தாலும் கூட இத்தகைய மூட நம்பிக்கையில், இத்தகிய ஜாதித் திமிரில், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கின்ற நிலையில் வர்ணாசிரம தருமம் பார்த்து இப்படிப்பட்ட தலித் மக்களை ஈழவர் என்று சொல்லப்படுகின்ற மக்களை வெறுத்து ஒதுக்குவதில் இரு சாராரும் ஒன்றாக இருக்க முடிகிறது. ஆனால் நிர்வாக ரீதியாக ஏற்பட்ட சண்டையைத் தீர்த்துக் கொள்ள அவர்களுக்கு நாராயண குரு தேவைப்படு கிறார். இதைத்தான் அவ்வளவு அழகாக நாராயண குரு அங்கே சுட்டிக்காட்டி நிலைமையை விளக்கினார் என்று இந்த நூலாசிரியர் வெகு சாதுரியமாகக் குறிப்பிட்டிருக் கின்றார்.

இதை நான் இன்னும் படித்து முடிக்கவில்லை. அவ்வளவு அருமையான விஷயங்கள். நாராயண குருவைப் பற்றி இதிலேயே இருப்பதை நான் பார்த்தேன். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், காலங்காலமாக இருந்த ஒரு மூடநம்பிக்கை, தொட்டால் தீட்டு, தொடக்கூடாது என்ற சட்ட திட்டம் சாதாரண விஷயமல்ல. இதை நான் அழகான மொழியிலோ அல்லது ஆத்திரமான சொற்களாலோ நமக்குள்ள பேச்சு வன்மையாலோ ஒழித்துவிட முடியாது.

அதற்கு நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்வோம் என்கிற துணிவு இருந்தாலன்னியில் இதை நாம் ஒழிக்க முடியாது. அந்தத் துணிவைப் பெற்று அப்படி பெற்ற துணிவை நமக்கெல்லாம் ஊட்டியவர்தான் தந்தை பெரியார். செய்ய முடியாவிட்டாலும், தன்னுடைய காலத்திற்குப் பிறகு செய்யக் கூடிய எங்களைப்

போன்றவர்களை, நம்மைப் போன்றவர்களைத் தயாரிக்கின்ற அந்த வல்லமையும், திறமையும், அந்த அறிவும், ஆற்றலும் பெரியாருக்கு இருந்த காரணத்தினாலேதான் இன்றைக்கு பெரியார் இல்லை என்று யார் சொன்னது? பெரியார் இன்னமும் இருக்கிறார் என்பதால்தான், இன்றைய தினம் ஓர் ஆதிதிராவிடர் அர்ச்சராக முடியும் என்கின்ற சட்டத்தை, ஆணையை நம்மால் பிறப்பிக்க முடிந்திருக்கின்றது.

நிலையான இன முழுக்கம்!

அந்த ஆணையைக் கண்டு அலறுகின்ற கூட்டத்தையும் காண முடிந்திருக்கின்றது. எல்லோரும் அலறவில்லை. நம்முடைய வீரமணியார் இங்கே விளக்கியதைப் போல நம்முடைய ஆன்மிகத்திற்கும், அறிவுலகத்திற்கும், பகுத்தறிவு உலகத்திற்கும், பாலமாக இருக்கின்ற நம்முடைய தவத்திரு அடிகளார் அவர்கள் இங்கே விளக்கியதைப்போல இதற்கு எதிர்ப்பு எங்கோ இங்கொன்றும், அங்கொன்றுமாக தலை காட்டலாம். ஆனால், அந்த எதிர்ப்புகள் நிரந்தரமானவை அல்ல, நிலையானவை அல்ல. ஏனென்றால், நிலையான இயக்கங்கள், நிலையான இன முழுக்கம் நம்முடையது. அவையெல்லாம் எப்படி வந்ததோ அப்டிப் போசக் கூடியது. அதைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

இன்றைய தினம் நாம் எடுத்திருக்கின்ற இந்த முடிவு, இந்த ஆணை நம்முடைய பரம்பரைக்கு, நம்முடைய இனத்திற்கு ஏற்பட்ட மாசு மருக்களையெல்லாம் கழுவி மானத்தின் உச்சியிலே நம்முடைய புகழ்க் கொடியை இன்றைக்கு நிலை நாட்டியிருக்கின்ற ஒன்றாகும். இது சாதாரண வெற்றியல்ல, இது ஏதோ மென்மையாகக் கிடைத்துவிட்ட வெற்றியல்ல. இது கஷ்டப்படாமல் கிடைத்த வெற்றியல்ல. நம்முடைய உயிரை அர்ப்பணிக்கத் தயார் என்று துணிந்த பிறகு கிடைத்திருக்கின்ற வெற்றி. இங்கே சொன்னார்களே ராசராச சோழன் கோவிலைக்

கட்டினான். ஆனால், அவன் உள்ளே நுழைய முடியவில்லை. அவனுடைய சிலையைக் கூட உள்ளே வைக்க முடியவில்லை என்று சொன்னார்களே. அன்றைக்கு அதற்காகப் பாடுபட்ட வர்கள், பேசியவர்கள், எழுதியவர்கள், ராசராசன் கட்டிய கோயிலில் அவனுடைய ஆதிக்கம் இல்லை, யாரோ ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்களே, அதற்குக் காரணம் ராசராச சோழனேதான். அவனே தான் காரணம்.

அடங்கிய இடம் எது?

அவன் யாரை வளர்த்தானோ எந்தக் கொள்கைகளை வளர்த்தானோ, எந்தக் கொள்கைகளில் வளர்ந்தானோ, எந்தக் கொள்கைகளுகுக்கு இடம் தந்தானோ, எந்த யாக சாலைகளை இங்கே உருவாக்குவதற்கு இடம் தந்தானோ, அந்த யாக சாலைகள், ஓம குண்டங்கள், அந்தப் பழைய காலக் கொள்கைகள், அந்த மொழி ஆதிக்கம் தமிழ் மொழியைப் பற்றிக் கவலைப்படாத நிலை, தமிழ் மொழிக்குள்ள வீரம், மானம், இவற்றைப் பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்காத கொடுமை, அதனால்தான் ராசராசன் உள்ளே செல்ல முடியவில்லை. வெளியிலே இருந்தான் வேறு யாரோ ஆதிக்கம் செலுத்தினார்கள். ராசராசனுக்கு அவர்கள் ஆசி வழங்குகின்ற இடத்திலே இருந்தார்கள். படை பல கொண்டு, நாடு பல வென்று, கடற்படை திரட்டி அங்கெல்லாம் பகைவரை வென்று, முடிசூடி கடல் கடந்தும் தன்னுடைய சாம்ராஜ்ஜியம் இருக்கிறதென்று அன்றைக்கு நிருபித்த சோழ மன்னர்கள், இராசேந்திர சோழனைப் போன்றவர்களெல்லாம் கடைசியாக அடங்கிக் கிடந்த இடம் எது? மராட்டிய மாநில சிவாஜி, மலை எலி என்று பெயர் பெற்றவன். கடைசியாக அடங்கிக் கிடந்த இடமாக ஆனது எது? காகப்பட்டருடைய வார்த்தையல்லவா? காகப்பட்டருக்கல்லவா அவன் அடங்கிக் கிடக்க வேண்டியிருந்தது.

அதைப்போல, மீண்டும் காகப்பட்டர்களுடைய ஆதிக்கம் வராமல் இருக்க, மீண்டும் ஆரியமாயை நம்மை அழிக்காமல் இருக்க தமிழர்களின் வீரம், திராவிடர்களுடைய நாகரிகம், பண்பாடு இவையெல்லாம் செழித்தோங்க இந்தச் செய்தி, இந்த ஆணை இன்றைக்கு அணுபோல இருக்கலாம். மிகச் சிறியதாக இருக்கலாம். ஆனால், உலக யுத்ததையே அன்றைக்கு மாற்றியது அணுதான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. உலக மகா யுத்தத்தையே நிறுத்திக் காட்டிய சக்தி அணுவுக்கு உண்டு. அதுவும் ஹிரோஷிமாவிலே வெடித்த அணுவுக்கு உண்டு. அந்த அணுபோல திராவிட இயக்கம் இந்தச் சாதனையை இன்றைக்குப் புரிந்திருக்கின்றது. இந்த அணுகுண்டு என்றென்றும் நம்முடைய கைகளிலே இருக்கும். இந்த அணுகுண்டை எதிர்த்து நம்முடைய இனத்தை, கலாச்சாரத்தை, பண்பாட்டை, நம்முடைய மொழி உணர்வை அழித்து வீழ்த்திவிடலாம் என்று யார் கருதினாலும் அதற்கு இடம் தரமாட்டோம் என்று பெரியார் முன்னிலையில், பெரியாருடைய திராவிடர் கழகத்தின் சன்னதியில், நான் சன்னதி என்று குறிப்பிடுவது, வைதிகர்களுக்குப் பிடிக்கும். ஆனால், எங்களுக்கு இதுதான் சன்னதி. எங்களுக்கு இதுதான் ஆலயம் எங்களுக்கு. இதுதான் கோயில் எங்களுக்கு. இதுதான் நாங்கள் பூஜிக்கின்ற இடம். அப்படிப்பட்ட பெரியாருடைய சன்னதியில் நாங்கள் இன்றைக்கு எடுத்துக் கொள்கின்ற வீர சபதம்தான் என்றைக்கும் நாங்கள் ஒன்றாக இருப்போம், என்றைக்கும் நாங்கள் இனை பிரிய மாட்டோம், இணையாக இருப்போம். எவரினும் நான் திராவிடர் கழகத்தை, திராவிடர் கழம் திராவிட முன்னேற்றக் கழகத்தை நாடும். இந்த நாடும் வாழும் என்று குறிப்பிட்டு விடைபெறுகிறேன். இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

நான் தைரியமாக இருக்கிறேன். சில நேரங்களில் எனக்கு எனக்கென்றால் தனிப்பட்ட எனக்கு அல்ல. நான் தலைமையேற்று இருக்கின்ற இயக்கத்திற்கு அல்லது ஆட்சிக்கு

இடையூறு வருமேயானால், என்ன செய்வது என்று நான் யோசிக்கின்ற அதே நேரத்தில் ''நானிருக்கிறேன். என்ன யோசனை?'' என்று தந்தை பெரியார் என்னுடைய உள்ளத்திலே உட்கார்ந்து கேட்பது பல நேரங்களிலே என்னைக் காப்பாற்றியிருக்கிறது. எனக்கு வீரத்தை உருவாக்கி இருக்கிறது. எனக்கு வைர நெஞ்சத்தை வழங்கியிருக்கிறது. ''பொறுமையாக இரு. அமைதியாக இரு. பொறுத்தார் பூமியாள்வார்'' என்று ஒரு புறத்திலே அண்ணா சொல்ல, அந்தப் பொறுமை உபதேசத்தை ஒரு காது கேட்டுக் கொண்டிருக்க, ''பொறுத்தது போதும், பொங்கியெழு'' என்று இன்னொரு பக்கத்தில் இன்னொரு காதிலே தந்தை பெரியாரின் முழக்கத்தையும் கேட்கின்ற அந்த நிலைமை இன்றைக்குப் பெரியார் இல்லை, அண்ணா இல்லை என்றாலும் கூட அந்தக் காலியிடங்களை நிரப்புகின்ற வகையிலே திராவிடர் கழகம் எனக்குத் துணையாக இருக்கிறது. இப்படி நான் சொல்வதை நாளைய தினம் யார் யார் எப்படியெல்லாம் பயன்படுத்துவார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதற்காக நான் பயப்படப்போதில்லை. அஞ்சக்கூடியவன் அல்ல நான். அப்படி அவர் சொன்னால்தான் அது எனக்கு பக்க பலம் (பலத்த கைதட்டல்). அது எனக்குத் துணிவைத் தரக்கூடிய ஒன்று என்பதை நான் உங்களுக்குக் கூறிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

பெரியார் கருத்துகளை உலவ விடுகின்ற ஒவ்வொரு நிமிடமும் சுயமரியாதை அணுக்களை உடலிலே உருவாக்குகிற காரியமாகும்

(சென்னை-கலைவாணர் அரங்கில் 23.12.2006 மாலை நடைபெற்ற ''பெரியார்'' திரைப்படப் பாடல் ஒலிப் பேழை மற்றும் குறுந்தகடு (சி.டி.,) வெளியீட்டு விழாவில் பங்கேற்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது)

தந்தை பெரியார் திரைப்பட ஒலி நாடா குறுந்தகடு வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் அதனைப் பெற்றுக் கொள்பவராக வருகை தந்துள்ள நம்முடைய அன்புக்கும், பாசத்திற்குமுரிய பகுத்தறிவாளர், கலைஞானி, பத்மஸ்ரீ தம்பி கமலஹாசன் அவர்களே, தமிழர் தலைவர், என் ஆருயிர் இளவல் தந்தை பெரியாருடைய கொள்கைகளைப் பரப்பிட, வலுப்படுத்திட உலகளாவ உலவிட உழைத்துக் கொண்டிருக் கின்ற மானமிகு வீரமணி அவர்களே, பெரியாராகவே தோன்றி மீண்டும் நாம் ஈரோட்டில் வாழ்கிறோமா என்ற உணர்வை என் போன்றோருக்கு எழுப்பிய ''இனமுரசு'' தம்பி சத்யராஜ் அவர்களே, என்னைப் பற்றி கடுகு அளவு சந்தேகம் இருந்தாலும், அதை நான் இந்தப் படத்தில் எழுதியுள்ள பாடல்களின் மூலமாகப் போக்கியிருக்கி றேன் என்று முழுமையான சுயமரியாதைத் தம்பியாக பகுத்தறிவு சீயமாக தன்னை வெளிப்படுத்தியிருக்கின்ற என்னுடைய அருமை தம்பி கவிப்பேரரசு வைரமுத்து அவர்களே, படத் தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவர், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் தம்பி இயக்குநர் ராம. நாராயணன் அவர்களே, இசையமைப்பாளர் அன்பிற்குரிய வித்யாசாகர் அவர்களே, பிரச்சினைக்குரிய

மணியம்மை வேடந்தாங்கி இதிலே இனி பிரச்சினையே இல்லை என்கிற அளவிற்கு நடித்துக் கொண்டிருக்கிற அன்புக்குரிய குஷ்பூ அவர்களே, இந்தப் படத்தினுடைய தயாரிக்கும் பொறுப்பெடுத்து மிக அருமையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அருமை நண்பர் சாமிதுரை அவர்களே, இந்தப் படத்தினுடைய இயக்குநர் ஞான. ராசசேகரன் அய்.ஏ.எஸ். அவர்களே, கலைஞானத்தால் இயக்குநர் பொறுப்பை இனிது நிறைவேற்றி சேகரன் என்ற பெயரால் தந்தை பெரியாருடைய வரலாற்றுச் செய்திகளை யெல்லாம் சேகரித்து பெரும் புகழ் பெற இருக்கின்ற என்னுடைய அருமைத் தோழர் ஞான. ராசசேகரன் அவர்களே, இவர் எந்த ஊர்க்காரர் என்று நம்முடைய தம்பி வீரமணி அவர்களுக்கே தெரியாத அளவிற்கு இந்த ஊர்க்காரர் தான் என்று தன்னை நிலைநாட்டிக் கொண்டிருக்கிற என்னுடைய நீண்ட நாள் நண்பர், எழுத்து வித்தகர், ஒளிப்பதிவில் பல வித்தைகளைச் செய்தவர் தோழர் தங்கர் பச்சான் அவர்களே, என் உயிரினுமேலான அன்பு உடன்பிறப்புகளே.

தந்தை பெரியார் அவர்களுடைய திரைப் படத்தின் ஒலிநாடா குறுந்தகடு வெளியீட்டு விழா நிகழ்ச்சி என்ற அறிவிப்பைத் தொடர்ந்து இன்று நடைபெறுகின்ற இந்த விழாவிலே கலந்து கொள்ள நான் இந்த மண்டபத்திலே நுழைந்தபோது, என்னை அறியாமல் ஏற்கெனவே சற்று தள்ளாடுகிற நிலையிலே என்னுடைய கால்கள் இருந்தாலும், அதிகமாகவே தள்ளாடிக் கொண்டு நான் மண்டபத்திலே நுழைந்தேன். காரணம், "பெரியார்" என்கின்ற அந்தப் பெயர்தான். வந்து அமர்ந்த பிறகு ஒரு சில மின்னல் காட்சிகள், அதற்கடுத்து தம்பி சத்யராஜ், பெரியாருடைய வாலிபத் தோற்றத்தோடு வந்து நின்றபோது எனக்கு மெய் சிலிர்த்தது. நான் என்னையே இழந்தேன்.

பக்கத்திலிருந்த தம்பி வைரமுத்துவிடம் சொன்னேன். இது தம்பி சத்யராஜ் செய்த தவம் அந்தத் தவம் இன்றைக்குப் பலித்திருக்கிறது என்று சொன்னேன். (கை தட்டல்).

புராணக் காலத்திலே தான், இதைத் தவமிருந்து பெற வேண்டும் என்று சொல்வார்கள். தவத்தைப் பாராட்டி, தவத்தைப் போற்றி, இதைச் செய்தார்கள் அன்றைக்கு. தவத்தைப் பழித்து இன்றைக்கு அதைச் செய்கிற, அதிலே வெற்றி காணுகிற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது.

பெரியாருடைய திரைப்படத்தை நாம் தயாரித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் பெரியாருடைய நினைவுச் சின்னங்களை ஒழிக்க வேண்டும், அழிக்க வேண்டும் என்று ஒரு சிலர் தமிழகத்திலே வட்டமிட்டுக் கொண்டிருக்கின்ற காட்சியை நாம் காண்கிறோம். "வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்வதற்குக் காரணம் வட்டமிடுவது என்பது உங்களுக்குத் தெரியும் (கைதட்டல்). நானே வசனம் எழுதியிருக்கிறேன். வட்டமிடும் கழுகு என்று. (சிரிப்பு). அந்தக் கழுகுகளை விரட்டுகின்ற அளவிற்கு, அந்தக் கழுகுகளுக்குப் பாடம் போதிக்கின்ற அளவுக்கு இந்தப் படம் வெற்றி மாலை சூடும் என்று நான். நம்புகிறேன் (கைதட்டல்) சூடவேண்டும். இயக்குநரும் இதற்குத் தங்களுடைய பங்களிப்பைச் செய்கின்ற கலைஞர்களும் அந்தப் பணியினை நிச்சயமாக மேற்கொள் வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இது வெற்றிகரமாக நடைபெற்று, தமிழகத்தில் நூறாவது நாள் விழா நடைபெறும் என்று சொன்னபோது எனக்கொரு நம்பிக்கை அதற்கும் நாம்தான் தலைமை வகிக்கப் போகிறோம் என்று.(கைதட்டல்)

தந்தை பெரியார் அவர்கள் அறவே சினிமாவை வெறுப்பவரல்ல. அவருடைய காலத்தில் "சூரியகாந்தி" என்ற

படத்திற்குக் கூட நூறாவது நாள் விழாவிலே தலைமை வகித்துப் பரிசுகளையெல்லாம் வழங்கியிருக்கிறார், உரையாற்றியிருக்கிறார். அந்த உரையில் அவர் என்ன கருத்துகளைத் தெரிவித்தாரோ, அந்தக் கருத்துகள் கலை யுலகத்திலே ஏற்கப்பட்டு, அதற்கேற்ப படங்கள் வெளி வருமேயா னால், அந்த வகையிலே அவர் என்றைக்கும் திரைப்படங்களை வெறுப்பவரல்ல.

"என் தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்.
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக
ஒன்றேனும் தமிழர் நடையுடை பாவனைகள்
உள்ளதுவாய் அமைக்கவில்லை. உயிர் உள்ளத்தில்லை!
ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதாயில்லை"
"வடநாட்டார் போன்ற உடை, வடநாட்டார் மெட்டு!
மாத்தமிழர் நடுவினிலே தெலுங்கு கீர்த்தனங்கள்!
வடமொழியில் ஸ்லோகங்கள்! ஆங்கில பிரசங்கம்!
வாய்க்கு வரா இந்துஸ்தான்! ஆபாச நடனம்!
அடையும் இவை அத்தனையும் கழித்துப் பாக்குங்கால்
அத்திம்பேர் அம்மாமி எனுந் தமிழ்தான் மீதம்!"

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடியதைப் போலத்தான் படங்கள் இருந்தன. அதனால்தான் தந்தை பெரியார் அவர்கள் சினிமாவை வெறுத்து ஒதுக்கினார். இது பரவுமேயானால் ஏனென்றால் ஆயிரக்கணக்கான மக்கள் பார்க்கின்ற, ரசிக்கின்ற ஒரு கலையாக இருப்பதால், இந்தக் கலையைத் துணை கொண்டு தவறான கருத்துகள் பரவினால், தமிழ்நாடு கெடும் என்பது வருங்கால சமுதாயம் கெடும் என்பது தந்தை பெரியாருடைய அழுத்தமான, திடமான நம்பிக்கை.

இன்றைக்கு அவரையே உருவகப்படுத்தி, அவருடைய வரலாற்றையே மய்யமாக வைத்து, அவருடைய வரலாற்றையே சொல்லி, விவரித்து ஒரு படத்தை நாம் வெளியிடவிருக்கிறோம்.

அந்தப் படத்திலே நம்முடைய தம்பி சத்யராஜ் அவர்கள் ஊதியம் பெறாமலே நடித்துக் கொடுக்கிறேன் என்று சொல்வது, எனக்கென்னவோ அது பொது நலமாகத் தெரியவில்லை (சிரிப்பு). அது ஒரு சுயநலம். ஆகாரத்திற்காக அழுக்கைச் சாப்பிட்டுத் தடாகத்தைச் சுத்தப்படுத்துகிறதே மீன் என்று நான்தானே எழுதினேன். அதைப் போல ஒரு சுயநலம். சுயநலத்திலும் பொதுநலம் கலந்திருக்கின்றது. எப்படி சுயநலம் என்றால், அவருக்குத் தெரியும். திராவிட இயக்கத்தின் வரலாறு என்பது அது ஒரு குறு நாவல் அல்ல. சிறுகதை அல்ல. அது ஒரு மிக நீண்ட தொடர்நாவல். நிற்காத நாவல். எழுதிப்படிக்க முடியாத அளவிற்கு, நீண்டு கொண்டேயிருக்கக் கூடிய வரலாறு. அந்த வரலாறு எதிர்காலத்தில் இருக்கக்கூடிய வரலாறு. எதிர்கால இளைஞர்கள் படிக்கக்கூடிய வரலாறு. அந்த வரலாற்றில் இப்படியொரு படம் எடுக்கப்பட்டது. தந்தை பெரியார் அவர்களுடைய பெயரை வைத்து ஒரு படம் எடுக்கப்பட்டது, அந்தப் படத்திலே இன்னின்னார் பணியாற்றினார்கள், அந்தப் படத்தின் முழுப் பொறுப்பை அதனுடைய வெற்றியை குறிக்கோளாக வைத்து, தமிழர் தலைவர் வீரமணி அவர்கள் பாடுபட்டார். அந்தப் படம் வெளிவந்து 100 நாள்கள் ஓடின, அந்தப் படத்திற்கு ஊதியமே பெறாமல் நடித்த ஒரு நடிகர் உண்டென்றால் அவர் தான் சத்யராஜ் என்று (கைதட்டல்). இன்னும் 100 ஆண்டுகளுக்குப் பிறகு கூட அவருடைய பெயரைப் பேசுவார்கள் என்றால் (கைதட்டல்) அதற்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் (பலத்த கைதட்டல்).

நான் இதைச் சொன்ன பிறகு குஷ்பூவிற்குக் கூட அந்த ஆசை வரலாம் (கைதட்டல்) மற்றவர்களுக்கும் அந்த ஆசை வரலாம். நான் 95 லட்சம் கொடுத்தேன், கொடுத்தேன் என்று

சொல்கிறீர்களே தவிர, நீங்கள் எவ்வளவு கொடுத்தீர்கள், கொடுக்கப் போகிறீர்கள் என்பதைச் சொல்லவேண்டுமல்லவா? அதற்காகச் சொல்கிறேன். ஏனென்றால், பெரியாருக்கு நாம் செலவழிக்கின்ற ஒவ்வொரு ரூபாயும், அவருடைய வரலாற்றை, அவருடைய காவியத்தை நாட்டு மக்களிடையே உலவ விடுகின்ற ஒவ்வொரு நிமிடமும் மனிதருக்குச் சுயமரியாதை அணுக்களை அவர்களுடைய உடலிலே உருவாக்குகின்ற காரியத்தை நாம் செய்கிறோம் என்று அர்த்தம்(கைதட்டல்).

நான் சட்டசபையிலே இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பு பேசினேன், படித்திருக்கக் கூடும் நீங்கள். பெரியாருடைய சிலையை திருவரங்கத்திலே உடைத்தான் என்ற செய்தி பத்திரிகையிலே வந்து, சட்டமன்றத்திலே அதைப்பற்றி சில உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி, கவன ஈர்ப்பு பிரச்சினை எழுப்பி, கேட்டபோது நான் சொன்னேன், ''தன்னை பெரியார் தான் மனிதனாக ஆக்கினார் என்று தெரியாத ஒரு வாலிபன் அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறான்'' (கைதட்டல்) என்று சொன்னேன்.

ஒருமுறை ஒரு சங்கடம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு ஏற்பட்டபோது, அப்போது பெரியார் இருக்கிறார். அவரிடத்திலே பேசிக் கொண்டிருந்தபோது கேட்டேன். ஏன் அய்யா, நான் பின்தங்கிய மக்களுக்காகத்தானே இவ்வளவும் செய்து கொண்டிருக்கிறேன், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகத் தானே பாடுபடுகிறோம், அவர்களே இப்படி எதிர்க்கிறார்களே, ஏன்? என்று கேட்டேன். யாரும் சொல்ல முடியாத பதிலை பெரியார் சொன்னார். ''அதனால் தான் பின்தங்கிய மக்களாக அவர்கள் இருக்கிறார்கள், ஞாபகத்தில் வைத்துக்கொள்'' என்று சொன்னார்கள். அவர்கள் அப்படி இருக்க வேண்டுமென்ற

எண்ணத்தில் அவரும் சொல்லவில்லை, நானும் கேட்கவில்லை. அவர்கள் ஏன் நம்மை எதிர்க்கிறார்கள் என்ற கேள்விக்கு அய்யா சொன்ன பதில் அது. அத்தகைய உணர்வை நமக்கெல்லாம் ஊட்டியவர் பெரியார்.

நம்முடைய தமிழர் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது குடும்பம், குடும்பம் என்று பேசினார். 1945 ஆம் ஆண்டு ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக்காலம், ஈரோட்டுக் குருகுலத்தில் நான் பயின்றபோது, அந்த இல்லத்திலேதான் நான் காலை உணவு, பிற்பகல் உணவு, இரவு உணவு உட்கொண்டேன். பரிமாறுகின்ற பணியை அன்னை மணியம்மையார்தான் ஏற்றுக் கொள்வார்கள்.

பெரியாரின் சிக்கனத்தைப் பற்றிச் சொன்னார்களே இங்கே, பெரியார் சிக்கனமல்ல. எதிலும் கண்ணும் கருத்துமா இருக்கவேண்டும் என்பதுதான் அவரிடம் முக்கியம். இரவு நாங்கள் உணவு அருந்திவிட்டு நான், டார்பிடோ ஜனார்த்தனம், தவமணி ராசன், கருணானந்தம் ஆகியோர் ''குடியரசு'' அலுவலகத்திற்குச் செல்வோம். செல்லும்போது மணியம்மையார் அவர்கள் ஒரு கிண்ணத்தில் மீன் குழம்பை வைத்து, காலையிலே பலகாரத்திற்கு இட்லி வாங்கிச் சாப்பிடுவீர்களே, அதற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கொடுப்பார்கள். அதை டார்பிடோ ஜனார்த்தனம் தான் வாங்கிக் கொண்டு வருவார், காலையிலே அதைப் பயன்படுத்திக் கொள்வோம். பிற்பகல் அய்யா வீட்டிற்குச் சாப்பிட செல்லும்போது, கவனமாக அய்யா அவர்கள் அந்தப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்தீர்களா (பலத்த சிரிப்பு) என்று கேட்பார். இதைக்கூட நேரம் இருந்தால் நம்முடைய சத்யராஜ் அவர்கள் இந்தப் படத்திலே பயன்படுத்திக் கொள்ளலாம். அப்படி ஒரே வீட்டில் நாங்கள் வாழ்ந்தோம். அவருடைய அருமை பெருமைகளையெல்லாம் அருகே இருந்து கவனித்தோம்.

நான் எப்படி எழுதவேண்டும் என்பதைக் கூடச் சொல்வார். நான் ஒருமுறை அதைச் சொல்லியிருக்கிறேன். நான் ''குடியரசு'' அலுவலகத்தில் போய்ச் சேர்ந்த புதிதில், எனக்கு துணை ஆசிரியர் பொறுப்பைக் கொடுத்து, முதல் கட்டளையாக திருவண்ணா மலையிலே தீபம், அதைப் பற்றி ''குடியரசு'' பத்திரிகையிலே எழுது என்று சொன்னார். நான் எழுதிக் கொண்டு போய் அய்யாவிடம் கொடுத்தேன். அதற்குத் தலைப்பு ''அண்ணா மலைக்கு அரோகரா'' என்று எழுதியிருந்தேன். படித்துப் பார்த்துவிட்டு நல்லாயிருக்கு, ஆனால் நீ இந்த அண்ணாதுரை மாதிரி அலங்காரமா எழுதியிருக்கே, விஷயத்தை மாத்திரம் சொல்லு என்றார். அவருக்கு இந்த அலங்காரம் அவ்வளவாகப் பிடிக்காது, அதற்காக அண்ணாவைப் பிடிக்காது என்று அர்த்தமில்லை. சொல்ல வேண்டிய விஷயங்களை சுருக்கமாக, சுவையாக, சூடாக, சுருக்கென்று சொல்லவேண்டும் என்பது அய்யா அவர்களின் கருத்து. அதை நான் உடனடியாக பயின்று, அதை ஏற்றுக் கொண்டு அப்படியே நான் செய்த காரியம் ஒன்று உண்டு.

அடுத்த சில வாரங்களுக்கெல்லாம் திருவையாறு தியாகையர் உற்சவத்தில் ஒரு சம்பவம். அதில் இசைவாணர்கள் எல்லாம் அவர்களாகவே சென்று பாடுவது வழக்கம். இப்போது பாடிக் கொண்டிருக்கிறார்கள், பணத்தைப் பற்றி கவலைப்பட மாட்டார்கள். அதை தியாக அய்யருக்குச் செய்யவேண்டிய கடமையாகக் கருதி செய்வார்கள். ஒரு நாள் தண்டபாணி தேசிகர் வந்து பாடினார். அவர் தமிழ் இசை இயக்கத்தின் தலைவராக அன்றைக்கு இருந்த காரணத்தால், அந்த மேடையிலே தமிழிலேயே பாடி முடித்தார். மறுநாள் இன்னொருவர் அங்கே கச்சேரிக்காக வந்தார், அவருடைய பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. அவர் நேற்று யார் பாடினார்? தேசிகர் பாடினார்.

என்ன பாடினார், அவர் முழுக்க தமிழ் இசையிலேயே பாடினார் என்றார்கள். அப்படியானால், முதலில் இந்த மேடையை தோஷம் கழியுங்கள், தீர்த்தம் தெளித்து இந்த மேடையில் தோஷம் கழித்தால்தான் நான் உட்கார்ந்து பாடுவேன் என்று சொல்லி விட்டார்.

தமிமிலே பாடி இந்த மேடை தீட்டாகி விட்டது என்றார். இந்த செய்தி பத்திரிகையிலே வந்தது. மறுநாள் தீர்த்தம் தெளித்து, தீட்டு கழித்த பிறகு அவர் பாடினார். அதற்கு பிறகு வரலாறு எப்படித் திரும்பியது என்றால், அப்படிச் சொன்னவரே, அதற்குப் பிறகு இருபதாண்டுகள் கழித்து தமிழ் இசைப் பாடல்களைத் தான் பாடித் தீரவேண்டுமென்ற நிலைக்கு ஆளானார். அது வேறு விவகாரம். ஆனால், அந்தச் செய்தி பத்திரிகையிலே வந்ததும், அய்யா என்னை அழைத்து, அதைப் படித்தாயா என்று கேட்டார்.

ஒவ்வொரு நாளும் காலையிலே ஆறு மணிக்கெல்லாம் நாங்கள் எல்லாம் அய்யா வீட்டிற்குச் சென்று விடுவோம். பத்திரிகையை எடுத்துப் போட்டு இதைப்பற்றி எழுது என்றார். எழுதிக் கொடுத்தேன். எனக்கு ஞாபகம் வந்தது. அண்ணாமலைக்கு அரோகரா என்று எழுதியது அவருக்குப் பிடிக்கவில்லை, இதை எப்படி எழுதுவதோ என்று நினைத்துக் கொண்டே ''தீட்டாயிடுத்து'' என்று தலைப்புக் கொடுத்து திருவையாற்றில் தமிழ் இசை பாடியதால் அந்த மேடை தீட்டாகி விட்டது என்று. ஒரு பாடகர் பேசியிருக்கிறார், என்ன அநியாயம் என்று எழுதினேன். அய்யா அதைப் படித்துவிட்டு, ஆங், இப்படித்தான் எழுதவேண்டும், இது எப்படி 'சுருக்' என்று படுகிறது பார், என்று இப்படி எனக்கு நான் அணணாவின் நடையைப் பின்பற்றியவன் என்றாலும் கூட, பெரியாருடைய

அந்த ஆற்றல், பெரியாருடைய அந்த ''ஸ்டைல்'' என்பார்களே, அதைப் பின்பற்றித் தான் கருத்துகளை சொல்கின்ற பயிற்சியும் எனக்குக் கிடைத்தது.

இப்படி பெரியார் அவர்கள் எனக்கு, என்னுடைய ஆருயிர் இளவல் தமிழர் தலைவர் வீரமணி அவர்களுக்கு அந்த அளவிற்கு ஆசானாக இருந்தார். நாம் அவரை இன்றைக்கு இழந்திருக்கிறோமென்றால், நாங்கள் இரண்டு பேரும் இன்றைக்கு இருக்கிறோம். நாங்கள் இருப்பது, என்னைப் பொறுத்தவரையில், அவரைப் பொறுத்தவரையில் இரண்டு பேரும் எண்ணிக் கொண்டிருக்கிறோம், பெரியாருடைய புகழைப் பரப்பத்தான் இயற்கை எங்கள் இருவரையும் விட்டு வைத்திருக்கின்றது என்று அந்த நம்பிக்கையோடுதான் நாங்கள் இருக்கிறோம் (பலத்த கைதட்டல்). அதைத்தான் நான் அண்மையிலே திருச்சிக்குச் சென்றிருந்த போது-பெரிய வளாகம் ஒன்று-பெரியார் அவர்கள் அந்தக் காலத்தில் பத்தாயிரம் ரூபாய் அளவிற்கு வாங்கிப் போட்டஇடம்-அதைப் பெரிய தோட்டமாக ஆக்கி, அந்தத் தோட்டத்தில், வெறும் மலர்கள் இல்ல, பகுத்தறிவு மலர்களை எல்லாம் உருவாக்கி, ஏறத்தாழ அங்கே நான்காயிரம் பிள்ளைகள் படிக்கிறார்கள். வல்லத்திலே 3,000 பிள்ளைகள் படிக்கிறார்கள் என்று பெருமிதத் தோடு, நான் அவரைக் கேட்டபோது, அவர் விடை சொன்னார் என்றால், நான் அவரிடம் சொன்னேன்.

பெரியார் ஒரு சரியான மாணவரைத் தான் விட்டுச் சென்றிருக்கிறார் (கைதட்டல்). சரியான வழித் தோன்றலைத் தான் விட்டுச் சென்றிருக்கிறார் என்று சொன்னேன். அந்த வழித் தோன்றலோடு நான் இணைந்து அவர் இங்கே குறிப்பிட்டாரே பெரியார் ஆட்சி நடக்கின்றது என்று பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் இணைந்து நடத்துகின்ற ஆட்சியை நிச்சயமாக

நடத்துவேன். எந்தக் கவலையும் வேண்டாம். நீங்கள் எனக்கு ''தி'' யாக இருங்கள். ஏனெனில், நீங்கள், கி.வீரமணி அல்லவா? (பலத்த கைதட்டல், சிரிப்பு).

அதிக நேரம் பேச இயலாத காரணத்தால் வரும்போது தயாரித்துக் கொண்டு வந்தேன். தயாரித்து என்றால் இப்போது அல்ல. 1974-ஆம் ஆண்டு சேலம் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்த ஒரு கவியரங்கத்தில், ''பெரியார்'' என்ற தலைப்பில் கவியரங்கத் தலைவராக இருந்து நான் பாடிய அந்தக் கவிதை வரிகளை உங்களிடம் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

★ ★ ★ ★

A1659

B894-8115
தமிழ

பானு பதிப்பகம்